TIRUVANMIYUR

தமிழரசு.

—————(*)—————

வணக்கம்.

அங்கயற்கண்ணம்மை.

“பொங்குருச் செல்வங் கல்வி பொருவிலா வாய்மை தூய்மை
இங்கெமக் கருள வல்ல விணையிலா வெம்பி ராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற் பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை யடிக்கம லங்கள் போற்றி.”

பெரும்பற்றப்புலியூர் நம்பி.

மலர்-க. { உருத்ரோத்காரிஹு பங்குனிமீ 1924-ஹு மார்ச்சு-ஏப்ரல்மீ } இதழ் ௬.

நட்பு.

நட்பு, சிநேகம், தொடர்பு முதலியன ஒரு பொருட்சொற்கள். நட்பு என்பது உயிருள்ள பொருள்களிடத்துக் காணப்படும் ஒருவித குணமாம். நட்பு என்றால் சேர்க்கை என்று பொருள். அதற்கு இருவரிருந்தாலன்றி அக்குணம் நிகழாது. ஒருவர் நட்போர் மற்றொருவர் நட்கப்படுவோர். ஆதலால் நட்பு என்பது நட்போர் நட்கப்படுவோர் ஆகிய இருவர்க்கும் இடையிலுள்ள ஒருவித குணமாம்.

நட்பாவது தம்மால் நட்கப்பட்டோன் கேட்டினைத்தரும் தீநெறிகளைச் செல்லுங்கால் விலக்கி, ஏனை நன்னெறிகளைச் செல்லாக்கால் செலுத்தி, தெய்வத்தால் கேடுவந்துழி அது விலக்கப்படாமையின் அத்துன்பத்தை உடனனுபவிப்பதேயாம். இதை,

“அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு” என்னும் குறளால் அறியலாம்.

இன்னும் நட்டவனுக்குக்கேடு வந்துழி அப்பொழுதே சென்று உதவி அதனைக்களைவதே நட்பாம். இதனை,

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு" என்பதனாலும் நட்பின் தன்மையை அறியலாம்.

அந்நட்புத்தான், இவர் நமக்கு இத்துணையன்பினர், இவர்க்கு இத்தன்மையம் என்று ஒருவரையொருவர் தாம் அவர் என்று வேறு படுத்திப் புனைந்து சொல்லிக்கொண்டாலும், மிகவும் புல்லிதாய்த் தோன்றும்.

அந்நட்பு, இயற்கை நட்பு செயற்கை நட்பு என இருவகைப் படும். அவற்றுள், இயற்கைநட்பாவது சுற்றம் முதலிய பிறப்பு முறைபற்றி வருவது. செயற்கைநட்பாவது ஒருவன் முன்செய்த உதவிபற்றி நட்புக்கொள்வது. இன்னும் நட்பை அறிவுடையார் நட்பு என்றும் பேதையார் நட்பு என்றும் வேறுபடுத்திக் கூறலாம். அறிவுடையவரோடுகொண்ட நட்பானது பிறைச்சந்திரன் நாளுக்கு நாள் கலை நிறைந்து பின் பூர்ண வளர்த்தியடைவதுபோல முதலில் சிறுமையாக ஆரம்பித்து வரவா நட்பு வேரூன்றிப் பலமடையும். பேதையாருடன் கொண்ட நட்பானது பூர்ணசந்திரன் வாவாத் தன் கலை குறைந்து தேய்ந்து இருண்டு போவதுபோல முதலில் மிகுதி யாக நட்புச்செய்யப்பட்டு வரவரக்குறைந்து இருவர்க்கும் நட்பின் றித்தீரும். இன்னும் அறிவுடையார் பேதையார் நட்பிற்கு வேறு உப மானமும் கூறலாம். அதாவது, காலையில் தோன்றுகின்ற ஒருவனது நிழலானது பெருகிவாவாச் சுருங்கி அவனது அடியையடைந்து ஒன்றுமின்றிக் கழிகின்றது. அதுபோலப்பேதையார் நட்பு முதலில் வளர்ந்து பின் குறையும். பின் அடியையடைந்த நிழல், சிறிதுசிறி தாக அகன்று கடைசியில் பெருகுவதுபோல அறிவுடையார் நட்பு, முதலில் சுருங்கிப் பின் பெருகும். அறிவுடையாரும் அறிவுடை யாரும் செய்த நட்பு, முன் சுருங்கிப் பின் பெருகற்கும், பேதையா ரும் பேதையாரும் செய்த நட்பு முன் பெருகிப் பின் சுருங்கற்கும், காரணம், முதலில் அவரது குணத்தையும் குற்றத்தையும் அறியா மையும் பின் அறிதலும் ஆம். இவற்றை,

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு" என்னும் குறளாலும்,

"நளிகடற் றண்சேர்ப்ப நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை—விளிவின்றி
யல்கு நிழற்போ லகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு. என்னும் நாலடியாராலும் அறியலாம்.

இன்னும் இவர்களது நட்பு, கரும்பு தின்னுகையில், நுனியிருந்து தின்றால், முதலில், இனிப்புச் சுவையுள்ளதாக இருந்து பின்னுனிக்கு வரவா உவர்ப்புள்ளதாக இருக்கும். அங்ஙனமன்றி நுனியிலிருந்து தின்றால், முதலில் உவர்ப்புள்ளதாக இருந்து வரவா இனிப்புள்ளதாக இருக்கும். அதுபோலப் பேதையார் நட்பு, முதலில், நன்மை பயப்பது போலத் தோன்றிப் பின் தீமை பயக்கும்; அறிவுடையார் நட்பு முதலில் நன்மை பயவாதது போலத்தோன்றினும் பின் நன்மை பயக்கும். இக்கருத்தை,

"கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
வீர மிலாளர் தொடர்பு."

"கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றுங்
குருத்திற் கரும்புதின் றற்றே—குருத்திற்
கெதிர்செலத் தின்ற தகைத்தரோ வென்றும்
மதுர மில்லாளர் தொடர்பு." எனவரும் நாலடிச்செய்யுட்களால் அறியலாம்.

இன்னும் அந்நட்பு, தலையாயார்நட்பு, இடையாயார்நட்பு, கடையாயார்நட்பு என மூவகைப்படும். அவற்றுள், தலையாயார் நட்பு பனைமரத்தைப்போல்வது; பனைமரத்தைநடுங்காலத்து, அதனதுகொட்டையைப் பூமியில் குழிதோண்டிப் போடுவது தவிர, அதற்கு வேறு யாதொரு உதவியும் செய்கிறதில்லை. அங்ஙனம் உதவி பெறாதஅது, மரமாகிப் பழம் நுங்கு கள் ஓலை நார் முதலிய பலன்களை மனிதர்க்குக்கொடுக்கின்றது. அதுபோலத் தலையாயார் நட்பு, "ஒருநாட்பழகினும் பெரியோர் கேண்மை, யிருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே"

என்றுங்கு முதலில் நட்குங்காலத்துச் செய்யும் உதவி மாத்திரத்தானே பல நாட்பழகினவர்போல என்ஞான்றும் பிரியாது உதவி புரிந்து வருவது. இடையாயார்நட்பு, தென்னைமரத்தை ஒத்தது; தென்னைமரம் நட்டுப் பயிராகிக் காய்க்கும் வரையினும் தோட்டத்தைக் கொத்துதல் நீர்பாய்ச்சுதல் முதலிய உதவிகளைச்செய்தால் பலன் கொடுக்கும்; பின்னர் அவ்வளவு பராமரிப்பு அதற்குவேண்டியதில்லை. அதுபோல, இடையாயார் நட்பு நட்டகாலம்முதல், அவர் நட்பு வேரூன்றும்வரையும் அவர்க்கு ஏதாவது உதவிசெய்து அவரைப் புகழ்ந்துகொண்டிருக்கவேண்டும். கடையாயார் நட்பு கமுகமரம் போல்வது; கமுகு வைத்தநாள் முதற்கொண்டு எப்பொழுதும் நீர் பாய்ச்சிக்கொண்டிருந்தால்அது பலன் கொடுத்துக்கொண்டிருக்கும்; அங்ஙனமன்றிச் சிறிது ஈரம் புலருமாறாலும் மரம் வாட்டமடையும். அதுபோலக் கடையாயார்நட்பு அவர்களுக்கு உதவி செய்துகொண்டேயிருந்தால் அவர் நண்பினராக இருப்பது; அவர்களுக்குச் செய்துகொண்டிருக்கும் உதவி நிற்க, அவரது நண்பும் நீங்கும். இக்கருத்தை,

"கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை
யிடையாயார் தெங்கி னனையர்—தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு"என்னும் நாலடியாரால்அறிக

ஒருவன், மேலே கூறியாங்கு நட்பினை ஆராய்ந்து நட்க வேண்டும். ஏனெனின், ஒருவனுடன் நட்பினைச் செய்துவிட்டு, பின் பிரிதல் நன்மையல்ல. ஆதலால் ஒருவனது குணத்தையும் குற்றத்தையும் முதலில் ஆராய்ந்து பின் நட்பினைச் செய்தல் வேண்டும். இதனை,

"நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு." என்பதனால் அறிக.

அங்ஙனம் ஆராய்ந்தால் நல்ல குணமுள்ளவனாகவும் நல்லகுடியிற் பிறந்தவனாகவும் உலகத்துக் குற்றமில்லாதாரின்மையின், பொறுக்கக்கூடிய குற்றமுடையவனாகவும், குறைமற்ற சுற்றத்தினையுடையவனாகவும், உயர்ந்தகுடியின்கட்பிறந்து தன்மாட்டு உலகத்தார் சொல்

லும் பழியை அஞ்சுபவனுகவும் உள்ள ஒருவனை எவ்விதத்திலாவது, நட்புக் கொள்ளவேண்டும். இன்னும், தாம் உலகவழக்கல்லது செய்யக்கருதின், சோகம் பிறக்கும் வகை சொல்லி விலக்கியும் செய்தக்கால் பின்னும் செய்யாவகை நெருக்கியும் உலகவழக்குச் செய்யா வழிச் செய்விக்கவும் வல்லாரை ஆராய்ந்து நட்புக்கொள்க. இவற்றை,

"குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்ரு
வினனு மறிந்தியாக்க நட்பு"

"குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு"

"அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்" எனவரும் குறள்களானறிக.

நட்புச்செய்தால், முதலில் தாம்செய்த நட்பை மேலும்மேலும் வளர்க்கவேண்டும். அங்ஙனமன்றி நட்புச்செய்வது பின் விட்டுவிடுவது பிறகு நட்பது பிறகு விட்டுவிடுவது ஆகிய குணத்தையுடையவருடன் நட்பது கூடாது. இதனை,

"கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி—தோட்ட
கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரு நட்பாரு மில்." என்பதனுனறிக.

இனி, தம்மால் நட்கப்பட்டவர், ஏதாவது பிழை செய்தால் அவற்றைப்பொறுத்து இனிமேல் அவர் அத்தன்மைய பிழைகளைச் செய்யவொட்டாமல் விலக்குவது நட்பினர் கடமையாம். அங்ஙனம் செய்யாக்கால் அந்நட்பால் யாது பயன்?

"பெரியார் பெருநட்புக் கோடலுஞ் செய்த
அரிய பொறுப்பவென் றன்றே—வரியரோ
வொல்லென் னருவி யுயர்வரை நன்னாட
நல்லசெய் வார்க்குத் தமர்." என்பதை யறியாரோ?

குணம் குற்றங்களுள் ஒன்றேயுடையார் உலகத்தின்மையின், தம்மால் நட்கப்பட்டவரிடத்தும் அவ்விரண்டும் காணப்படும். தாம்

அவரது குற்றத்தைக் கூடியவரையிலும் விலக்கி அவர்க்குக் குணத்தையறிவிக்கவேண்டும். அங்ஙனம் அவர் பிழைகளைச் செய்துவிடுவாராயின் அதற்காகத்தாம் அவரை விட்டுவிடுதல் நட்பிற்கழகன்று. தன் கை கண்ணைக்குத்திற்று என்று அதைக் களைந்து எறிபவருண்டோ? அவர் செய்த பிழைகளைத் தம்முள் அடக்கிக்கொள்வதே பெருமையாம். இக்கருத்துக்களை,

"இன்னா செயினும் விடுதற் கரியாரைத்
துன்னாத் துறத்தல் தகுவதோ—துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப களைபவோ
கண்குத்திற் றென்றுதங் கை"

"தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயி னவரைத்
தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
தம்மு ளடக்கிக் கொளல்." எனவரும் நாலடிச் செய்யுள்களாலறிக.

அங்ஙனமே, அவர், தம்மிடத்துப் பிழைசெய்வாராயின் அதுமனமறியச் செய்யப்பட்டதொன்றன்று; அவர் அறியாமையான் நேர்ந்தது; அல்லது அவர் நம்மிடத்துள்ள உரிமையான் நேர்ந்தது என்று கொள்ளவேண்டுமேயல்லாது, அவரது அன்பின்மை என்று கொள்ளப்படாது. இதை,

"பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்" எனவரும் குறளாலறிக.

ஆதலால், அந்நட்புக்கொண்டதற்கு அறிகுறியாகத்தாம்செய்ய வேண்டுவது, தம்மால் நட்கப்பட்டவன் மிகுதியான செய்கையைச் செய்யும் வழி அவன் அது செய்யும் முன்னரே முற்பட்டு அங்ஙனம் செய்யாவகை கழறல் வேண்டும்; அதுவன்றித் தாமிருவரும் ஒருவரோடொருவர் ஒன்று கூடியிருந்து நகுதற்கியைந்தவற்றைச்சொல்லி நகையாடற்பொருட்டு மாத்திரமல்ல தாம் நட்புச்செய்தது. இதை,

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு" என்பதனானறிக.

தாம் செய்த நண்பு கெடாதிருத்தற்குக் காரணமாயிருப்பன புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி, ஒத்தல் என்பனவாம். அவற்றுள் புணர்ச்சி, ஒருதேயத்தாராதல். பழகுதல், பலகாற்கண்டும் சொல்லாடியும் மருவுதல். இவ்விரண்டுமின்றிக் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் கருத்து ஒருமித்ததுபோல இருப்பதுஉணர்ச்சி ஒத்தலாம்.

நட்பிற்கு முக்கிய எடுத்துக்காட்டாயுள்ள அவர்களது வரலாற்றை ஈண்டுச் சுருக்கிக் கூறுவாம்.

கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும்.

கோப்பெருஞ்சோழன், சோழநாட்டையாண்ட அரசன். அவன் ராஜதானி உறையூர் என்பது; அவன் நன்றாகப்படித்தவன். செய்யுள் செய்தலில் வல்லவன். அவன் பாண்டிநாட்டுப் புலவராகிய பிசிராந்தையார் என்னும் புலவரைப்பற்றிக் கேள்விப்பட்டு அவரிடத்துத் தன் அன்பைச்செலுத்தினான். அதுபோலவே, அப்புலவர் பெருமானும் அவ்வாசனைப்பற்றிக் கேள்வியுற்றுத் தம் அன்பை அரசனிடம் செலுத்தினர். அதனால் ஒருவர்க்கொருவர் உணர்ச்சி ஒத்து நண்பு உண்டாயிற்று. அது முதலாக அவர்கள் ஒருவர்க்கொருவர் நேரிற் பார்த்துக்கொள்ளாமற் போயினும் மிக்க நண்பினர்களாகவேயிருந்து வந்தனர். பிசிராந்தையாரை யாராவது 'புலவரே! நமது பெயர் யாது?' என வினவினால். அவர் தம் உண்மைப்பெயரைக்கூறாது பேதைச்சோழன் என்று சோழன் பெயரைத் தமது பெயராகக்கூறுவர். அவர் 'ஏன் அங்ஙனம் கூறவேண்டும்' என்று ஆராய்ந்தால் அவர்களது நட்பின் உண்மை விளங்கும். தாம் வேறு சோழன் வேறு என்று தங்களை இருவராகக் கருதினால் நட்புப் புல்லென்று தோன்றும் என்பது கருதித் தம்மையும் சோழனையும் ஒற்றுமைப்படுத்தித் தம் பெயரைக்கூறினார் என்று புலப்படுகிறது.

கோப்பெருஞ்சோழனுக்கு மக்களிருவர் இருந்தனர். அவர்களுக்கும் சோழனுக்கும் விதிவயத்தால் பகை நேர்ந்தது. சோழன் போர்க்கு எழுந்தான். அக்காலைச்சோழனுடனிருந்த புலவர் புல்லாற்றூர் எயிற்றியனார் என்பவர் சோழனைப்பொரவொட்டாமல் தடுத்து அவ

னுக்கும் அவன் மக்கட்கும் *சந்து செய்வித்தனர். புலவரால் சமாதானம் செய்யப்பட்ட சோழன், தன்னரசைத் தன்மக்களிடத்துக்கொடுத்து இவ்வுலக வாழ்க்கையைத்துறந்து வடக்கிருப்பானாயினன். வடக்கிருத்தல் என்பது, உலகவின்பத்தை முற்றும் வெறுத்து பட்டினி கிடந்து உயிர் துறக்கலாம். இதனை "பிராயோபவேச விரதம்" என்பர் வடநூலார். இத்தகைய அரிய விரதம் தற்கொலையாகாது சநாதன தர்மங்களில் ஒன்றாக அக்காலத்தில் கருதப்பட்டது.

புலவர் அவ்வரிய செயலினை உணர்ந்து தம் அரிய நண்பினனான சோழன் உயிர்விடத் துணிந்தமைக்குஆற்றாராய்த் தாமும் சோழனுடன் உயிர்விடக்கருதித் தம் நாட்டினின்றும் சோழநாடு நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

சோழன், தான் வடக்கிருக்கும்பொழுது தன்னிடத்துள்ள புலவர்களை நோக்கி 'இப்பொழுது பிசிராந்தையார் என்னும் என் அரிய நண்பினர் இங்கே வருவர்; அவரும் என்னுடன் கூடவே வடக்கிருப்பார். ஆதலின் நீங்கள் அவருக்கும் இடம் ஒழித்துவைக்க' என்றான். புலவர்கள், 'அரசனே! அப்புலவர் வாரார்; அவர்க்கு நீ வடக்கிருக்கும் செய்திதெரியாது; ஆதலின் வீண்முயற்சி எடுத்துக்கொள்வானேன்' என்றனர்.

அரசன், 'சான்றோரே! நீங்கள் நீ வடக்கிருக்கும் செய்தி அவர்க்குத்தெரியாது'என்று கூறியது விந்தையே! நான் வேறுஅவர்வேறு இல்லை; என் உணர்ச்சியே அவர் உணர்ச்சி; அவர் உணர்ச்சியே என் உணர்ச்சி; நான் எதை மனதில் நினைக்கின்றேனோ அது அவர் மனத்தால் நினைக்கப்பட்டதாம்; ஆதலின் அவர் வந்துவிடுவார்.

"தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்
பிசிரோ னென்பவென் னுயிரோம் புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே" எனவும்,

"கேட்டன் மாத்திரை யல்ல தியாவதும்
காண்ட லில்லா தியாண்டு பலகழிய
வழுவின்று பழகிய கிழமைய ராயினும்
அரிதே தோன்ற லதற்பட வொழுகலென்
றையங் கொள்ளன்மின் னாறி வாளீர்
இகழ்வில னினிய னியாத்த நண்பினன்

தொடரும் (பத்திராசிரியர்.)

---

* தூதுவிட்டுச் சமாதானம் செய்தல்.

ஆபுத்திரன்.

(190-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆபுத்திரன் அத்தீவின் காட்சியைக் கண்ணுற இறங்கினன். இறங்கின அவன் ஏறிவிட்டானென்று மாலுமி கப்பலை இருட்காலத்தில் செலுத்திக்கொண்டு போய்விட்டான். அது தெரிந்த ஆபுத்திரன் அந்தோ! நான் எண்ணியபடி சாவகநாடு செல்லுதற்கு இயலாது போய்விட்டதே எனப் பலவாறு கவன்று "இவ்வமுதசுரபியை அடைதற்கு முற்பிறப்பில் மிக நல்வினைசெய்த நான் சிறிது தீவினையும் செய்தமையால் தனித்துத் துயருழக்கின்றேன்" எனவருந்திக்கூறி பல உயிரைப் பாதுகாத்தற்குரிய "இப்பாத்திரத்தை வெண்டிரைதந்த அமுதை வானோர், உண்டொழி மிச்சிலை யொழித்து வைத்தாங்கு வைத்துக்கொண்டு என்னுயிரை மாத்திரம் பாதுகாத்து ஒருவருமில்லா இத்தீவத்தில் நான் இரேன்" என்று அப்பாத்திரத்தைத் தொழுது "வருடத்திற்கு ஒருமுறை வெளித்தோன்றுவாயாக" என்றுகூறி அத்தீவிலுள்ள கோமுகி என்னும் பொய்கையுள்ளே விடுபவன், "தயாதர்மமுடையோராய்ப் பல்லுயிர் ஓம்பும் பண்புடையாளர் எவரேனும்வரின் அவர்கையிற் புகுவாயாக" என்று சொல்லி அப்பொய்கையில் விட்டான். பாத்திரம் அமிழ்ந்தியது. ஆபுத்திரன் அநசன நோன்புபூண்டு மணிபல்லவத்திலே சில நாளிருந்து ஆண்டுவந்த அறவணவடிகள் என்னும் பௌத்தாசிரியரைத் தரிசித்து நிகழ்ந்தவற்றைக் கூறிவிட்டு உயிர்துறந்தான்.

முன்பு ஆபுத்திரனுக்கு எழுநாள்வரையும் பாலூட்டி வளர்த்த நற்பசுவானது அப்புண்ணியப்பயனால் சாவகநாட்டில் தவளமலையில் தவஞ்செய்துகொண்டிருக்கும் மண்முக முனிவனிடத்தில் பொன்மயமான கொம்புகளையும் குளம்புகளையும் உடையதாய்ச் சென்று கன்றீனுமுன்னமே பால்சுரந்து எல்லா உயிர்களையும் ஊட்டிக்கொண்டிருந்தது; அதனைக்கண்டு, முக்கால நிகழ்ச்சிகளையும் அறியவல்ல அம்முனிவரன், 'இப்பசுவயிற்றில் உலகத்தில் மழைவளஞ் சுரக்கவும் மன்னுயிர் ஓம்பவும் ஒரு விசேட புருடன் குடலின் சம்பந்தமின்றி பொன்மயமான முட்டையில் தோன்றுவான்' என்று கூறினன். இஃது இங்ஙனமாக முன் மணிபல்லவத்தில் உயிர்நீத்த ஆபுத்

திரன் சாவகநாடுசென்று தருமஞ்செய்ய வேண்டுமென்ற சிந்தனை யோடு தன்னைக் குழந்தைப்பருவத்தில் பாலூட்டிக்காத்த பசுவை நினைந்துகொண்டே உயிர் துறந்தானாகலின், உயிர் உடம்பைவிட்டு நீங்குங்காலத்து அதனால் யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது அதுவாய்த் தோன்றுமென்ற துணிவின்படி மண்முக முனிவன் கூறியபடியே சாவகநாட்டில் அவ்விசேட பசுவின் திருவயிற்றில் உலகுய்யத்தோன்றி உதித்தனன். அவன் உதித்தகாலம் புத்தன் திருவவதாரகாலமாகிய வைகாசிமாதத்து சுத்தபூர்ணமையாகும். அவன் உதித்த அம் முகூர்த்தத்தில்,

புத்த ஞாயிறு தோன்றுங் காலைத்
திங்களும் ஞாயிறுந் தீங்குறா விளங்கத்
தங்கா நாண்மீன் தகைமையின் நடக்கும்
பானம் பொய்யாது மாநிலம் வளம்படும்;
ஊனுடை உயிர்கள் உறுதுயர் காணா;
வளிவலங் கொடகும் மாதிரம் வளம்படும்;
நளியிரு முந்நீர் நலம்பல தரூஉம்;
கறவைகன் றூர்த்திக் கலநிறை பொழியும்;
பறவை பயன்றுய்த் துறைபதி நீங்கா;
விலங்கு மக்களும் வெரூஉப் பகைநீங்கும்;
கலங்கஞர் நரகரும் பேயுங் கைவிடும்;
கூனுங் குறளும் ஊமுஞ் செவிடும்
மாவு மருளும் மன்னுயிர் பெறூஉ;

எனக் கூறியபடி புத்ததேவர் அவதரிக்குங்காலத்து நிகழ்தற்குரிய இந்நன்னிமித்தங்கள் அனைத்தும் உலகமுழுவதும் நிகழ்ந்தன.

அங்ஙனம் விநோதமாக அவதரித்திருந்த குழந்தையை சாவக நாட்டு நாகபுரத்தரசன் பூமிசந்திரன் என்பான் அறிந்து மகப்பேறில்லாது வருந்தும் அவன் மண்முக முனிவரை அடைந்து வணங்கி இரந்து பெற்றுக்கொண்டுபோய் வளர்க்க வளர்ந்து புண்ணிய ராஜனென்னும் நாமம்பூண்டு அரசர்க்குரியகலைபலவும் பயின்று அரசுரிமை பெற்றான்; பெறவும் மழைபொய்யாது பெய்ய மண்ணும் மாநும் வளம்பலதர உயிர்கள் நோயிகந்து சுகமுற்றன;

இங்ஙனம் ஆபுத்திரன் புண்ணிய ராஜன் என்னும் பெயரின னாய்ச் சாவக நாட்டில் அரசு செலுத்திக்கொண்டிருக்கும் நாளில் சோழவள நாட்டிலே காவிரி கடலோடு கலக்கும் சங்கமுகத்துறை யிலேயுள்ள சோழரது ராஜதானியாகிய காவிரிப்பூம் பட்டினத்திலே கோவலன் என்னும் வணிககுலோத்தமனுக்கு மாதவி யென்னும் நாடகக்கணிகை வயிற்றிற் பிறந்த மணிமேகலை யென்பாள் தன் தந்தையாகிய கோவலன் மதுரையில் பாண்டியராஜனால் கொலையுண் டிறந்த செய்திகேட்டு வருந்துவதை ஒரு வகையாக மாற்ற நினைந்து அவள் தாய் மாதவி மணிமேகலையை நோக்கி நீ தொடுக்கும் கண்ணி கண்ணீர்பட்டமையான் கடவுள் பூஜைக்கு ஆகாததாயிற்று. சோலை சென்று புதுமலர் கொணர்க எனக்கூறலும் அங்ஙனமே மணி மேகலை சுதமதி யென்னும் தோழியோடு மலர்பறித்தற்கு உபவனம் என்னும் சோலைக்குச் சென்றாள். அதனை முன்னரே மணிமேகலையை விரும்பியிருந்த அந்நகரத்தரசன் கிள்ளிவளவன் புத்ரன் உதயகுமாரன் என்பான் அறிந்து அவளைச்சோலையினின்றும் வலிதிற்கவர்ந்து வரக் கருதித்தேரேறிவந்தான்; அங்ஙனம் அவன் வருவதையுணர்ந்த சுதமதி யென்னும் தோழி மணிமேகலையை அச்சோலையிலுள்ள பளிங்கறை யுள் புகச்செய்து உதயகுமாரனுக்குப் பல நீதிமொழிகளைக் கூறி மணிமேகலையைக் கவரவிடாது தடுக்க அவன் அவளை அவள்பாட்டி சித்திராபதியால் சேரவுங் கூடுமெனக் கூறிப்போய்விட்டான்.

பின்பு பளிக்கறையிலிருந்து வெளிப்போந்த மணிமேகலையும் சுதமதியும் உதயகுமாரன் விஷயமாகச் சம்பாஷித்துக்கொண்டிருக் கையில் கோவலனது பழையகுல தெய்வமாகிய மணிமேகலா தெய் வம் தன்பால் பக்திபூண்டிருந்த கோவலன் மகள் மணிமேகலையை பௌத்தசமயவழியிற் செலுத்தி நற்கதிபெறச் செய்யக்கருதி அவர் கள் அறிந்த ஒரு மடந்தை வேடங்கொண்டு அங்குவந்து அவர்களை நோக்கி "நீங்கள் இங்கிருந்தால் மீளவும் உதயகுமாரனால் உங்களுக்குத் துன்பம் உண்டாகும்; ஆகையால் முனிவர்கள் வசிக்கும் சக்கரவாளக் கோட்டத்திற்குச் செல்லுங்'களென்று கூறி அவர்களை அடுத்துள்ள சக்கரவாளக் கோட்டத்திற்குச் செல்லும்படிசெய்து அன்றிரவில் சுதமதி அங்குதூங்கும்போது மணிமேகலையை மாயவித்தையால் மயக்கித் தழுவிஎடுத்துக்கொண்டு ஆகாயவழியே முப்பது யோசனை

தூரம் தெற்கே சென்று, கடல்சூழ்ந்த மணிபல்லவம் என்னும் தீவில் வைத்துவிட்டுத் திரும்பிவந்து சுதமதியைத் துயிலெழுப்பித் தான் மணிமேகலையைத் தூக்கிச்சென்றதையும் அவள் பூர்வஜென்ம வுணர்ச்சிபெற்று இற்றைக்கு ஏழாவது நாளிலே வருவாள் என்பதையும் சொல்லிப்போனது.

அப்பால் சுதமதி துயிலெழுந்து மணிமேகலையின் பிரிவால் வருந்திப் பொழுது புலர்ந்தபின் வருத்தத்தோடு மாதவியை அடைந்து நிகழ்ந்தவற்றைக்கூறி இருவரும் மணியிழந்த நாகம்போல் துன்பத்துள் மூழ்கியிருந்தார்கள்,

இவர்கள் இங்ஙனம் வருந்திக்கொண்டிருக்க மணி பல்லவத்தில் கடலருகே மணலிற்றுயின்ற மணிமேகலை துயிலுணர்ந்து சுதமதியைக் காணப்பெறாது இடமும் தோற்றங்களும் வேறாயிருப்பவும் அறிந்து திகைத்து, சுதமதியை அத்தீவத்துப் பல இடங்களிலும் தேடியும் காணப்பெறாமையால் பல சொல்லிப் பிரலாபிக்கின்றவள் கொலையுண்டிறந்த தன் தந்தை கோவலனை நினைந்து புலம்பிக்கொண்டிருந்தாள். அங்ஙனம் புலம்பிக்கொண்டிருப்பாள் முன்னர் இந்திரனால் இடப்பெற்றதும் முன்னர்பழம்பிறப்பையுணர்த்துவதுமானபுத்த பீடிகை அவள் கண்ணுக்குத்தோன்றியது. தோன்றலும் மணிமேகலை விம்மிதங்கொண்டுபரவசமாய்க் கரங்கள்தலைமேற் குவியஆநந்தக்கண்ணீர் சொரிந்து பீடிகையை மும்முறை வலம்வந்து தொழுது தன் பழம்பிறப்பு நிகழ்ச்சிகளையும் தெய்வம் தன்னை அங்கு தூக்கிக் கொண்டு வந்ததையும் உணர்ந்து அத்தெய்வத்தின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது மணிமேகலா தெய்வம் மணிமேகலையின் பக்குவத்தை அறிந்து ஆகாயத்தினின்றும் இறங்கி வந்து அவளுக்கு முற்பிறப்பில் கணவனாயிருந்த இராகுலன் வரலாற்றையும் அவனே இப்போது உதயகுமாரனாப் பிறந்திருக்கிறான் என்பதையும் கூறி ஆகாயவழியே சஞ்சரிக்கச் செய்வதும் உணவின்றியிருக்கச்செய்வதும் வேற்றுவடிவம் அளிப்பதுமாகிய மந்திரங்கள் மூன்றை உபதேசித்துவிட்டகன்றது.

அப்பால் மணிமேகலை அத்தீவிலுள்ள புளினங்களையும் பொய்கைகளையும் பூஞ்சோலைகளையும் பார்த்துக்கொண்டே உலாவிவருகை

யில் பெண் ஒருத்தி எதிர்ப்பட்டு மணிமேகலையை நோக்கி "மிக்க துயரத்தோடு தனியேதிரியும் நீயார்"? என்று கேட்டாள். அதற்கு மணிமேகலை தன்னுடைய சென்றபிறப்பின் செய்திகளையும் இப் பிறப்பின் வாலாற்றையும் கூறி, உன் வாலாறு யாதெனக் கேட்க அவள் "இத்தீவிற்கு அயலிலுள்ள இரத்தின தீவத்திலே மிகவுயர்ந்து விளங்கும் சமந்தகூட மலையின் உச்சியிலுள்ள புத்ததேவரது அடியிணைப் படிமங்களைத் தரிசித்துவிட்டு இத்தீவிற்கு முன் ஒரு காலத்தில் வந்தேன். அதுமுதல் இந்திரன் கட்டளையால் இத்தரும பீடிகையைக் காத்துக்கொண்டிருக்கிறேன். என் பெயர் தீவதிலகை என்பது" என்று தன் வாலாறுகூறி புத்தபீடிகையின் மகத்துவத்தையும் அதனைத் தரிசித்து மணிமேகலை பழம்பிறப்புணர்ந்ததையும் புகழ்ந்துகூறிப் பின் ஆபுத்திரன் கோமுகிப் பொய்கையில்விட்ட அக்ஷயபாத்திரத்தை அவள் கைப்படுத்தவெண்ணி "இந்தப்பீடிகைக்கு முன்னே மாமலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிக் கோமுகியென்னும் கொழுநீரிலஞ்சி ஒன்றுளது. அப்பொய்கையுள் ஒரு அமுதசுரபி யென்னும் அக்ஷயபாத்திரம் அமிழ்ந்திக்கிடக்கின்றது. அது ஒவ்வொரு வருடத்தும் புத்ததேவர் அவதார காலமாகிய வைகாச பூர்ணமை நாள்தோறும் மேலேவந்து தோன்றுநிற்கும். அந்தநாள் இந்நாளேயாம். அது தோன்றும் வேளையும் இதுவே. இப்போது அப்பாத்திரம் அருளறம்பூண்ட உனது கரத்தில் வருமென்று கருதுகின்றேன். அதில் எடுக்கும் அன்னம் எடுக்க எடுக்க மேன்மேலும் வளர்ந்துகொண்டே வரும். அதன் வாலாற்றைப் பின்பு புகார்நகரத்து அறவணவடிகள் பால் கேட்டுணர்வாயாக" என்று தீவதிலகை மணிமேகலைக்குச் சொன்னாள். சொல்லலும் மணிமேகலை அதனைவிரைந்து பெறுதற்கு விரும்பிப் புத்தபீடிகையை வணங்கி கோமுகிப் பொய்கையை அடைந்து வலமாகவந்து நின்றவளவில் அப்பாத்திரம் மணிமேகலை கையை அடைந்தது. உடனே அவள் கரைகாண வரிதான உவகைக்கடலுள் மூழ்கிநின்று புத்ததேவரது திருவடிகளைத் துதித்து நின்றாள். இங்ஙனம் நின்ற மணிமேகலைக்கு தீவதிலகை

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்

பசிப்பிணி யென்றும் பாவிஎன, பசித்துன்பத்தின் கொடுமையையும்

ஆற்றுநர்க் களிப்போ ரறவிலை பகர்வோர்
ஆற்று மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே!

என அப்பசியை ஆற்றுவோரது சிறப்பையும் அறிவுறுத்தினாள்.

இதனை அறிந்த மணிமேகலை ஏழைகளது முகத்தைக்கண்டு இரங்கி இப்பாத்திரம் மேன்மேலும் அவர்களுக்கு அமுதுசுரந்தளிக்கும் அற்புதத்தைக் காணும் விருப்புடையேன் என்று கூறி தீவதிலகையோடு சிறிதுநேரம் அளவளாவியிருந்து அவளைப் பணிந்து விடைபெற்று புத்தபீடிகையைத் துதித்து ஆகாயகமன மந்திரத்தை ஜபித்து மேலெழுந்து ஆகாயவழியே புகார்நகாஞ் சென்று தன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் மாதவி சுதமதிகளைக் கண்டு அவர்கள் வியப்பண்டயும் வண்ணம் அவர்களுக்கு முற்பிறப்பை உணர்த்தி இது ஆபுத்திரனது திருக்காத்திலிருந்த அமுதசுரபி. இதனைத் தொழுமின் என்று கூறி தவவழியைப் பெறுதற்கு அறவணவடிகளை அடைதற்கு அவர்களை அழைத்துக்கொண்டு அவர் இருக்கும் இடத்தை விசாரித்தறிந்து அவரைத் தரிசித்துப்பணிந்து தான் உவவனஞ் சென்றதுமுதல் மணிமேகலா தெய்வத்தால் மணிபல்லவஞ்சென்று புத்தபீடிகையைத் தரிசித்துப் பழம் பிறப்புணர்ந்து அமுதசுரபியைப் பெற்றதுவரையுமுள்ள நிகழ்ச்சிகளைக் கூறித் தனக்குத் தருமோபதேசம் புரிந்து ஆபுத்திரன் வரலாற்றையும் தெரிவிக்கும்படி வணங்கிக்கேட்டாள். அதற்கு

அம்முனிவன் மகிழ்ந்து "சிலநாள் கழிந்து உனக்குத் தருமோப தேசம் செய்வேன். நீ உயிர் மருந்து போன்றதாகிய இவ்வமுத சுரபி யைக்கொண்டு பசிப்பிணியை உலகில் ஒழிப்பாயாக" என்று கூறி விட்டு மணிமேகலை விருப்பப்படி ஆபுத்திரனது வரலாற்றைக் கூறத் தொடங்கி அவன் பிறந்ததும், வளர்ந்ததும், அமுதசுரபி பெற்றதும், மணிபல்லவத்தில் உயிர்நீத்ததும் பின் சாவகநாட்டில் புண்ணிய ராஜ னாய் அரசுசெய்வதுமாகிய வரலாறனைத்தையும் விரித்துக்கூறினார்.

பின்னர் மணிமேகலை அறவணவடிகளின் கட்டளையின்படி அந் நகரத்து ஆதிரையென்னும் கற்புடைப் பெண்டிர் கையால் முதன் முதல் அமுதசுரபியில் பிச்சையிடப்பெற்று அதினின்றும் வளரும் உணவால் பசித்தோர் பசியைப்போக்கி காயசண்டிகை யென்னும் வித்தியாதரமங்கையின் தீராப்பசியாகிய யானைத்தீயையும் (பங்க நோய்) போக்கி பின்னும் பல விசேட நிகழ்ச்சிகளைக் காவிரிப்பூம் பட்டினத்துள் நிகழ்த்திவிட்டு அமுதசுரபிக்குரியவனாகிய ஆபுத்திர னைக்கண்டு புத்தபீடிகையைத் தரிசிக்கச்செய்து அவனுக்கு அவ னது பழம்பிறப்பை உணர்த்தி நல்வழிப்படுத்தக் கருதி அறவண வடிகள் மாதவி சுதமதி இவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு ஆகாயவழியே சென்று சாவகநாட்டில் புண்ணியராஜனது நகர்ப் புறத்து ஒரு சோலையை அடைந்து அங்குள்ள ஒரு முனிவனை வணங்கி இந்நகரின் பெயர்யாது? இதனை ஆளும் மன்னவன் யாவன்? என்று வினவினாள்; அம்முனிவன் இந்நகரின் நாமம் நாகபுரம் என் பது. இதனை ஆள்பவன் பூமிசந்திரன் மகனாகிய புண்ணியராஜன். இவன் பிறந்த நாட்டொட்டு இந்நாட்டில் மழைவளம் பிழைத்த தில்லை. பூமியும் மரமும் பல் வளங்களைச் சுரந்தளிக்கின்றன; உயிர்கள் நோயிகந்து சுகமாய் வாழ்கின்றன என அவ்வரசன் பெருமை முத லியவற்றை அவளுக்கு விரித்துரைத்தனன். அவ்வமையம் புண்ணியராஜன் தன் பெருந்தேவியோடு அச்சோலைக்குவந்து ஆண் டுள்ள தருமசாவகனென்னும் முனி புங்கவரை வணங்கி,

அறனு மறனும் நித்தமு நித்தமுந்
திறனுந் துக்கமுஞ் செல்லுயிர்ப் புக்கிலும்
சார்பிற் றோற்றமுஞ் சார்பறுத் துய்தியும்
ஆரிய னமைதியும் அமைவுறக் கேட்டு

பின்பு முனிவர் அருகிலிருந்த மணிமேகலையை நோக்கி ஈடு மெடுப்புமில்லாத பேரழகினள் கையிற் பிச்சைப்பாத்திர முடையவளாய் அறவுரை கேட்கின்றாள் யார்? என்று வினவுகையில் அருகே நின்ற சட்டையிட்ட பிரதானி அரசனை வணங்கி "இந்நாவலந் தீவில் இந்நங்கையை ஒப்பார் யாவருமிலர். முன்னொருகாலத்தில் கிள்ளிவளவனோடு நட்புச்செய்யக்கருதி காவிரிப்பூம் பட்டினம் சென்றிருந்த காலத்து அங்கேயுள்ள அறவணவடிகள் என்பார் இவள் வரலாற்றை விளங்கக் கூறினாரென்று முன்னமே உரைத்திருந்தேனல்லவா? அவளே இவள் என்று கூறினன். கூறலும் மணிமேகலை அரசனைநோக்கி "அரசே! உன்கையிலிருந்த பாத்திரமே என்கையிற் புகுந்தது. செல்வக்களியால் மயங்கினைபோலும். சென்றபிறப்பையும் இப்பிறப்பையும் அறிந்திலை. என்செய்தனை!! மணிபல்லவஞ் சென்று புத்தபீடிகையை வலங்கொண்டு தொழுதாலன்றி உனது பழம்பிறப்பின் செய்தியை அறியாய் ஆதலால் அரச! அங்கே விரைந்து வருவாயாக" என்று சொல்லிவிட்டு எழுந்து ஆகாயவழியே சென்று சூரியன் அஸ்தமிக்கு முன்னர் மணிபல்லவத்தில்இறங்கிப் புத்தபீடிகையை வலங்கொண்டு தொழுதாள். அது வழக்கம்போல் அவளது பழம்பிறப்பை அறிவித்தது. அதனைவியந்து அங்கே தங்கியிருந்தனள்.

(தொடரும்.)

ஆ. கார்மேகக் கோனார்,
அமெரிக்கன் காலேஜ், மதுரை.

திருக்குறள் நீதிநெறி விளக்கம்.

(183-ம் பக்கத்தொடர்ச்சி.)

2-வது வான்சிறப்பு.

இவ்வுலகத்திலுள்ள உயிர்கள் வாழ்வதற்கும், அவை மேன்மேலும் வர்த்தனமாவதற்தும், இவ்வுலக மொடுங்காது நிலைத்து நிற்பதற்கும் நீர் இன்றியமையாதது. அஃறிணை யுயிர்கள் பலவற்றுக் குணவாய் உபயோகப்படும் புல்பூண்டுகளும், காய்கனிகளை யுதவுமரங்களும், வளப்பமுற்று வளர்வதற்கும் அது மிகவுமவசியம். நீர் வருவாயில்லையாயின் நிலத்தை உழுது பண்படுத்தி நெல் முதலிய உணவுத்தானியங்களை விளைவித்தலாகிய கிருஷித்தொழில் நடைபெறாது, நீர் இவ்வாறு உணவுப்பொருள்களை உண்டாக்கித் தந்து உயிர்களின் வயிற்றைப்பற்றி வருத்தும் பசியைப் பரிகரிப்பதன்றித் தானு முக்கியவுணவாய் உபயோகப்பட்டுத் தாகத்தையுந் தணிக்கின்றது. புறத்தூய்மையின் பொருட்டு உடலழுக்கு உடைமாசு முதலிய அசுத்தங்களைப் போக்குவதற் கேற்பட்ட ஆசாரம், அகத்தூய்மையின் பொருட்டு விஷயவிச்சை காமக்குரோதம் முதலிய குற்றங்களை நீக்குவதற் கேதுவாகிய தவமாதி நல்லொழுக்கங்களும் நீரையின்றியமையா.

இவ்வள வுபயோகமான நீரை நமக்குக் குறைவறத்தந் துபகரிப்பது மழை; சுனையாறு குளங்கூவ முதலிய நீர்நிலைகள் நமக்கெக்காலத்தும் தந்துதவு நீரெல்லாம் அவை மழைக்காலங்களிலே தம்மிடத்தே கொண்டு சேமித்துவைத்துள்ள மழைச்சலமேயாகும். உரியபருவங்களில் ஒழுங்காய்ப் பெய்யாது சில சமயங்களில் இவ்வுலகத்துயிர்களைக் கெடுத்தழிப்பதும், பிந்திச் சரிவரப்பெய்து அவ்வாறு கெட்டொழிந்த வுயிர்களை மீட்டுமுதிப்பித்து வளர்த்து வாழ்விப்பதும் மழையே. மழையைப் பெய்யும் மேகோற்பத்திக்கு முக்கிய வாதாரமான கடலும் நீர்குறைந்து தன்னீர்மை குன்றாமலிருப்பதற்கு அம்மழையே உதவிசெய்கின்றது.

மழை கிரமமாய்ப் பெய்யாதொழியின் விளைவஃகும். விளைவு குறையப் பொருள் வருவாய் குன்றிவிடும். அது சுருங்க வறியவர்க் குதவலாகிய ஈகை, தக்கோர்க் களித்தலாகிய தானம், உலகத்தின்

நன்மையை யுத்தேசித்துப்புரியும் வேள்வி, தேவர்களைக் குறித்துச் செய்யும் நித்தியநைமித்திகப் பூசையாகிய நல்லறங்களையும் நன்கு நடைபெறும்.

இவ்வாறு பலவகையாலும் பயன்பட்டு இவ்வுலகத்தை அழியாதுகாத்து நிலைநிறுத்தலின் மழை, தேவருணவாய்ச்சிறந்து விளங்குந் தேவாமிருதமென்றே யாவரும் புகழ்ந்து போற்றத்தக்கதாயிருக்கின்றது. யாதொரு கைம்மாறுங் கருதாது கடவுளாணையால் இவ்வுலகத்துக்கு மழைபுரியும் இப்பேருதவிக்கு நாஞ்செய்யக்கூடிய பிரதியுபசாரம், அதை நாம் வாழ்த்தி வணங்கலேயாகும்.

3-வது நீத்தார் பெருமை.

தத்தம் சமயசாதி நிலைகளுக்குரிய தருமங்களில் ஊன்றிநின்று வழுவாதொழுகி, அறிவனுபவமுதிர்ச்சியால் பிறப்பு வீடென்னும் இவ்விரண்டின் துன்பவின்பக் கூறுபாடுகளை உள்ளவாறுணர்ந்து, காலக்கிரமத்தில் அநித்தியமான இம்மை மறுமை யின்பங்களில் அருவருப்புண்டாகி, வீடுபேற்றின்கண் விருப்பெழுந்து, அதற்குச் சாதகமான தவப்பயிற்சியாலும் யோகமுயற்சியாலும் மெய்யுணர்வுதித்து, யானெனது என்னுமிருவகைப் பற்றுக்களையும் இவ்வுலக வாசனையையும் முற்றத்துறந்த முனிவர்களின் பெருமைக்கொப்பாக வேறு எவ்விதப் பெருமையையும் இயம்பவியலாது. நீத்தார் பெருமையே எல்லாப் பெருமையினும் மிக்கதென்பது எல்லாச்சமயிகளுக்கும் உடன்பாடானகொள்கை. யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட விஷயம் பிறரால் அனுட்டித்தற்கரிய விரதங்களையும் செய்தற்கரிய தவத்தையும் முயலுதற்கரிய யோகத்தையும் மேற்கொண்டொழுகிப் பேரறிவும், போற்றலும் வாய்க்கப்பெற்ற முனிவர்களே பெரியோரென மதிக்கற்பாலார். அவ்வாறு செய்யமாட்டாதாரெவரும் கல்வியறிவு செல்வ வுத்தியோகங்களால் உயர்ந்தோராயினும் சிறியரேயாவர்.

மெய், வாய், கண், மூக்கு, செவிகளாகிய ஐம்பொறிகளின் வாயிலாக ஊறு, சுவை, யொளி, நாற்ற, வொலிகளாகிய ஐம்புலநுகர்ச்சிக்கண் மனஞ்சென்று திளைக்காது தடுத்து அதையடக்கி யொருக்கி

யாளும் முனிவர்கள் முக்கால வர்த்தமானங்களையும் மூவுலக நிகழ்ச்சிகளையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெள்ளிதினுணரும் அவதிஞான முடையவர்கள்; அவர்களே எவரையும் அழிக்கவு மாக்கவும் வல்ல சாபாநுக்கிரகசத்தி வாய்ந்தவர்கள். ஒரோர்காரணத்தால் இந்திரன் முதலிய தேவாதிபர்களும் அவர்கள் சாபத்தையேற்று இழிந்திடருற்றிருக்கின்றார்களென்றால் இத்தவ வலியைவிட மேலானதொன்றுண்டோ? அவர்கள் அருளிக்கூறினும் வெகுண்டு கூறினும் நினைத்தபயனை அவை தப்பாதுடனே பயத்தலின் அவர்கள் "நிறைமொழிமாந்தர்" எனப்படுவார். அவர்கள் அருள்வாக்காயெழுந்த அற்புத சத்தியோடுகூடிய அனேக மந்திரங்கள் அவர்கள் பெருமையை நமக்கு இன்றும் கண்கூடாகக் காட்டிநிற்கின்றன. அவர்கள் சகலபிராணிகளிடத்தும் போருளுடையவராய்ச் செவ்விய தண்ணளி புரிந்தொழுகும் உத்தம சுபாவம் பொருந்தியவாதலால் அவர்களுக்கு 'அந்தணர்' என்ற சிறப்புப் பெயருமுண்டு.

முற்றத்துறந்த இம் முனிவர்கள் இவ்வாறு நற்குணப் பெருங்குன்றாய் விளங்கினும், எவ்வுயிர்களிடத்தும் நிறைந்த போருளுடையவராயிருப்பினும், யாரேனும் அடாப்பழிபாவச் செயல்களைச் செய்யக்கண்டால் அவர்கள் வெகுண்டு கோபித்து அவர்களைச் சபித்துவிடுவார்கள். அவ்வாறு மூண்டெழுந்த அவர்சினம் ஒருகணத்தினளவிற்றேயாயினும் அதற்கிலக்காயினார் அதைத்தவிர்த்தலுந் தடுத்தலும் அரிதினுமரிதாம்.

இனையார்கிய பெரியோரனைவரும் நாம் வணங்கி வாழ்த்தி வழிபடுவதற்குரியவரே.

4-வது அறன்வலி யுறுத்தல்.

ஆதியில் வேதத்தில் இறைவனாலும் பின்தி அதன்வழிப் போந்த ஸ்மிருதிகளில் முக்காலத்தையு முணர்ந்த மூதறிஞர்களான முனிவர்களாலும் இவ்வுலகத்தின் நன்மையையும் இதில் வாழுமுயிர்களின் நலத்தையு நாடி, யாவருஞ் செய்தே தீரவேண்டு மென்று விதிக்கப்பட்டவைகளைச் செய்தலும், ஒழிந்தே தீரவேண்டு மென்று ஒதுக்கப்பட்டவைகளை விலக்கலும் ஈண்டு 'அறம்' எனப்படும். பெரும்பான்

மையும் இம்மைப்பயனையும் சிறுபான்மையே மறுமைப்பயனையும் அளிக்கத்தக்க பொருளும் இன்பமும் போலாது அறம் இம்மை மறுமை வீடென்னும் மூன்றையு மொருங்கே பயக்கு மாதலானும், பொருளின்பங்களை யெய்துவிக்கும் பெருஞ்சாதனமா யிருத்தலானும் அதுவே புருஷார்த்தங்கள் நான்கனுள்ளும் மிகச்சிறந்தது. இவ்வாறு அறம் இம்மையிற் பொருளின்பங்களை யெய்துவித்து, மறுமையிலே துறக்க முதலிய கீழான பதங்களிற் சேர்ப்பித்தலன்றி, மீண்டும் ஈண்டுப்பிறவா நெறித்தாகிய மேலான முத்திப்பதவியையுந்தாத் தக்கதாயிருத்தலின், மாந்தர்களுக்கு நலம்பயப்பதில் அதைவிட மேலான தொன்றில்லை; அப்படியே கேடுவிளைப்பதிலும் அதைக் கடைப்பிடித் தொழுகாது கைநழுவ விடுவதைக்காட்டிலும் மேலான தெதுவுமில்லை.

அறநெறியான் ஈட்டிய பொருளே அழியாமனின்று மேன் மேலும் அறஞ்செய்வதற் குபயோகப்படும். அறத்தொடு பொருந்தி வரும் இன்பமே மெய்யின்பமாகும். அவ்வாறு வாராத இன்பங்கள் முதலில் இன்பம் போலத் தோன்றினும் இறுதியில் துன்பமாகவே முடிந்து மேலும்பழிபாவங்களுக்கிடனுவதன்றி புகழைத்தரமாட்டா.

ஒருவன் ஒரு பிறப்பின்கட் செய்யும் அறம், அவனுயிர் அவ்வுடம்பை நீத்து வேறுடம்பையுற்று மறுபிறப்புக்களை எய்தியக் கண்ணும் அதனோடு ஒன்றி நின்றுதவி புரிதலின் சிற்றுயிர்க்கு அதுவே பொன்றுத்துணையாம். ஆகையால் அறம் யாவரும் விரும்பிச் செய்தற்குரியது, பாவம் வெறுத்து விலக்கற்பாலது.

அறத்தின் பயன் இத்துணைத்தென்பதை ஆத்தன் மொழியாகிய வேதாகமப் பிரமாணங்களாலன்றி, இவ்வுலகத்திலே உறுப்பாலும் பிறப்பாலு மொத்தவர்களிற்சிலர் சிவிகையூர்ந்து செம்மாந்து செல்லவும் பலாதனைப் பரிந்து தாங்கி வருந்திச்செல்ல நாம்பலகாலுங் காணுங் காட்சியளவையாலுந் தெளிந்தறியலாம்.

இத்தகைய அருஞ்சிறப்பு வாய்ந்த அறத்தை ஒவ்வொருவரும் தத்தமாற்றலுக்கும் இடம்பொருளேவல்களின் அமைதிக்குமியன்றவாறு,இடைவிடாது மனமொழி மெய்யாகிய மூவிடத்தானுஞ்செய்ய

வேண்டும். அப்படிச் செய்யுங்கால் அழுக்காறு அவா வெகுளி யாகிய மனக்குற்றங்களும், கடுஞ்சொல்லாகிய வாக்கின் குற்றமுந் தம்மிடத் துண்டாகாதபடி வெகு சாக்கிரதையாய்த் தம்மை அவர்கள் பாது காத்துக்கொள்ளவேண்டும். தீயசிந்தனைகளும் தீக்குணங்களுமாகிய மாசுகளற்று மனம் தூய்மையாயிருத்தலே அறங்களுக்கெல்லாம் இன்றியமையாத சாதனம், முதன்மையானவுறுப்பு. மனம் நன்னிலை பெறாது பிறமெய்மொழிகளாற் செய்யும் அறமெல்லாம் பிரசம் சையைக் குறித்துச் செய்யும் வீணாடம்பரங்களேயன்றி நற்பயனை யையும் நல்கமாட்டா.

யாக்கையுஞ் செல்வமும் நிலையாதனவாகையால், அறத்தைப் பிந்திச்செய்து கொள்ளலா மென்று நினைத்துக் காலந் தாழ்க்காது, இளமைப்பருவந் தொடங்கியே நாம் நமது வாழ்நாளெதுவும் பாழ் நாளாகாதபடி அதை மேற்கொண் டொழுகல் வேண்டும்.

"கம்பாலயம்"
புரசைப்பாக்கம்
சென்னை

க. இராமரத்நம் ஐயர்.

(கதாசரித்சாகரம்.)

வரருசி சரிதம்.

(164—ம் பக்கத்தொடர்ச்சி.)

வரருசி தன் கிரஹத்தை யடைந்தவுடன் அவ்விடத்திலுள்ள வர்கள் வரருசியைக் கண்டதும் கோவென்றலறி யழத்தொடங்கினர். அப்பொழுது உபவர்ஷர் வரருசியையடைந்து அரசன் வரருசியைக் கொன்றுவிட்டான் என்று அறிந்து உபகோசையானவள் தீயில் வீழ்ந்து இறந்துவிட்டாள் என்றும் வரருசியின் தாயார் மிகுந்த துக்கத்தால் மனம் வெடித்து இறந்தாள் என்றும் கூறினர். வரருசி யதனைக்கேட்டு மிக்க துன்பமடைந்து அடியற்ற பனைபோலப் பூமி யில் சாய்ந்தான். பின்னர் ஒருவாறுதெளிந்து வரருசிஎழுந்தபொழுது அவனுடைய ஆசிரியரான வர்ஷர் அவனைநோக்கி "அப்பனே! நீ ஈசு வரனுடைய மாயையை அறியாமல் மயங்குகின்றாய்; இந்தச் சம்சா

ரம் நித்தியமானது என்றும் அழிவற்றது என்றும் எவனும் கருதவே மாட்டான். அங்ஙனமாக எல்லாம் அறிந்த நீயே மயங்கி இவ்விதம் வருந்துவாயேயானுல் மற்றவர்கட்குக் கேட்பானேன்'' என்றுகூறித் தேற்றினர்.

வர்ஷருடைய மொழிகளால் வாருசி தெளிவடைந்து ஈசுவரனையே மனத்தில் நினைந்துகொண்டு மனவமைதியுடன் தன் வாழ்நாளைக் கழித்தனன்.

இப்பால் வாருசி யோகநந்தனை விட்டுவிலகியது, அவனுக்குத் தீமை செய்யவேண்டும் என்று கருதிக்கொண்டிருந்த அவனுடைய பகைவனன சகடாலனுக்குத் தக்கவேளையாக வாய்த்தது. அவன் யோகநந்தனை எவ்விதத்தில் கொல்லலாம் என்று ஒருநாள் கருதிக் கொண்டிருக்கையில் சகடாலன் தன் எதிரில் பூமியைத் தோண்டிக் கொண்டிருக்கின்ற சாணக்யன் என்னும் மறையவனைக்கண்டு அவனையழைத்து நீ பூமியைத் தோண்டவேண்டிய காரணம் என்ன என்று வினவ, அவன் "ஐயனே! இதோ இந்தப்புல் என் காலை இடறி நோவையுண்டாக்கிற்று; எனக்குத் தீமைசெய்த அதனை நான் வேருடன் களைந்தெறிகின்றேன்'' என்று கூறினன். சகடாலன் அம்மறையவனுடைய மேற்கொண்ட காரியத்தை முற்றுவிப்பதிலுள்ள உறுதியையும் மனத்தின் நிலைமையையும் அறிந்து இவனல் நம்முடைய பகைவனுக்கு இறுதியைத் தேடலாம் என்று கருதி அவனை நோக்கி "வேதியனே! திரயோதசி தினத்தில் இவ்வூரசன்ன நந்தன் சிராத்தம் செய்யப்போகின்றான். அன்று உன்னை எல்லாரினும் முதன்மையாக வைத்து உணவளிக்கச் செய்கின்றேன். நல்ல உணவு கிடைக்கும். தக்ஷிணையாகஓரிலக்ஷம் பொன்னும் கிடைக்கும். நீ அதுவரையும் என் கூடவந்து எனது வீட்டில் இருக்க'' என்று கூறித் தன்னுடன் அழைத்துச் சென்றான். அங்ஙனமே யரசன் திரயோதசி தினத்தில் சிராத்தம் செய்யத்தொடங்கினன். சகடாலன் சாணக்யனை அரசனெதிரில் அழைத்துப்போய், இன்று சிராத்தத்தில் இவனை முதலில் உட்காரவைத்து உணவளிக்கலாம் என்று கூறினன்.

அரசன் அதனைக்கேட்டு சுபந்துஎன்பவனே அதற்குத்தக்கவன். அவனே முதலில் இருக்கட்டும் என்றுகூறி மறுத்துவிட்டான். சகடா

லன் வெளியில் வந்து சாணக்யனை நோக்கி நான் அரசனிடத்தில் உன்னைப்பற்றிக் கூறியும் அவன் உன்னை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டான். நான் யாதுசெய்வேன்? இது என் குற்றமில்லை. அரசன் குற்றமே என்று மிகவும் வணக்கமாகக் கூறினன்.

சாணக்யன் அதனைக்கேட்டு மிக்க சீற்றம் அடைந்து தன் குடுமியைஅவிழ்த்துத் தொங்கவிட்டுக்கொண்டு "உறுதியாக நான் இன்று ஏழாவது தினத்தில் நந்தனைக்கொன்றுவிடுகிறேன்; அவனைக்கொன்று என்சினத்தைத் தணித்துக்கொண்ட பிறகுதான் இதோ அவிழ்ந்து தொங்கும் என் குடுமியைமுடிந்துகொள்வேன்" என்று சபதம் கூறினன். அதனைக்கேட்டு யோகநந்தன் சாணக்யனிடத்தில் மிக்க கோபங்கொண்டான். அதனையறிந்த சாணக்யன் அவ்விடத்திலிருந்து மறைந்து ஓடிவிட்டான்.

பின்னர்ச் சகடாலன் அவனை ஒருவருக்கும் தெரியாமல்அழைத்துப்போய்த் தன்வீட்டில் வைத்துக்கொண்டான். சாணக்யன் உடனே தனக்குவேண்டிய சில உபகரணங்களை அம்மந்திரியாகிய சகடாலனிடமிருந்து பெற்றுக்கொண்டு எங்கேயோ சென்று ஒரு பிசாசத்தைக்கிளப்பி விட்டுவிட்டான். யோகநந்தன் அதனல் பீடிக்கப்பட்டு வெப்பு நோய்கொண்டு ஏழாவது நாளில் இறந்துவிட்டான்.

பின்னர்ச் சகடாலன் யோகநந்தனுடைய குமாரனன இரண்யகுப்தனையும் கொன்று பழைய நந்தனுடைய புதல்வனன சந்திரகுப்தனை பாடலிபுத்திரத்திற்கு அரசனகச்செய்து முடிசூட்டிச் சாணக்யனை அவனுக்கு முக்கிய மந்திரியாகச் செய்தான்.

பத்திராசிரியர்.

விடுகதை விஞ.

நேரிசையாசிரியப்பா:

காமநூல் வில்லி முன்னேன் காதலி
நாமகள் வேள்வி நடாயபின் நானம்
ஆடுவா னமயந் தாழ்த்த லாகவிக்
கூடு நீங்கிநீ கூடற் பதிவாய்

ஆறெட் டக்கா வருந்தமிழ்ப் புலவர்
கூறுநீ யுடனே கொள்கெனக் கூறலும்
அங்ஙன மடைந்தாட் கருள்தரு மாலவாய்ச்
சின்மதி முன்னர் சீர்பெறப் பிறந்து
பன்மதிப் பாவலர் பண்புறு நாக்களின்
உற்றுநின் ருடி யோங்கி வளர்வாட்
குற்றதோர் நாமம் உயர்தமி ழரசே!
இவள்பா லியம்பும் விடுகதைக் கேற்க
உவப்புப் பொருடனை யுற்றுரைப் பார்க்கு
மாழைக் கண்ணி மாதவன் அருள்க
ஏழுக் காரங்க ளிசைத்த புணர்ப்பதம்
ஒன்று தனித்திடி னுரைப்பது கவியே
ஒன்றும் நான்கும் ஒன்றின் காவல்
ஒன்றஞ்சு மூன்றேழ் ஓர்கவி வலவன்
ஒன்ரு றேழ்சங் கீதனூ ரசூரன்
ஒன்று மஞ்சும் பாவ மொன்றல்
ஒன்றிரண் டேழு மூன்றாறு காலரன்
ஒன்று மூன்று முறுசிறு மழைப்பு
ஒன்றே ழோர்வினை யெச்ச விகுதி
இரண்டுமூன் றேழு மிடப்பே ரேற்கும்
இரண்டு நான்குங் கொடாப்பொரு ளீயும்
இரண்டிரண் டிரண்டேழ் ஏற்பது சாதி
இரண்டு மஞ்சு மிசைப்ப துரிச்சொன்
மூன்றைந் தேழு மூற்குசன் பின்னோன்
மூன்றைந் தாறேழ் முன்னுவ தசூரன்
அஞ்சு மிரண்டு மாம் கொலை
அஞ்சுமூன் றேழு மாக்கும் வயமே.

குகாம்பிகாதாசன்.

வடகரை அரமனை, பெரியகுளம்.

சம்பகமாலினி.

(192-ம் பக்கத்தொடர்ச்சி.)

காளி—தேளுக்கு மணியங்கொடுத்தால் ஜாமத்துக்கு ஜாமம் கொட்டும். என்று கேள்வியுற்றிருக்கிறோமல்லவா? அதுபோல் தான் சல்லியனுக்கு அரசுப்பதவி கிடைத்தால்,

ப-பா—அவ்விதம் நேருமாயின் நான் என் மந்திரிவேலையையும் விட்டுவிட்டு இவ்விராஜ்யத்தினின்றும் ஓடிவிடுவேன். இப்பொழுதே நம்மை எதிரியாக எண்ணி நம்மீது கோபங்கொண்டிருக்கின்றான். அவனது வைஷ்யத்தைச் செலுத்தமுடியாததால் நம்முடன் சிநேகம் பாராட்டுகிறான். இல்லாவிடில் நமதுயிர் மறுநாளிராது.

சுமந்—இதையெல்லாங் கவனியாது அரசனும் அவன் வார்த்தைக்குடன்பட்டு நடந்து வருகின்றார். மற்றும் சபையில் இன்று அவனால்தான் ராஜ்யம் சிலகாலமாக அரசு செலுத்தப்பட்டு வருகிறதென்று நம் அரசர் உரைத்தார்.

காளி—அது மாத்திரமல்ல. தனக்குப்பின் சல்லியன் பிரதிநிதியாக விருக்கவேண்டுமாம். அரசகுமாரிக்கு விவாகம் நடந்தவுடன் ராஜ்யத்தை அவள் கணவரிடம் ஒப்புவிக்க வேண்டுமாம். என்ன மடமை. இவைகளெல்லாம் வயது சென்றதின் பலனோ! பூனையின் கையில் கிளியைக்கொடுத்துக் காப்பாற்றச் சொல்லுவது போலிருக்கின்றது. என்ன அநியாயம்.

ப-பா—நாமென்ன செய்யக்கூடும். சுமந்திரர் கூறியதையும் கவனியாது மகாராஜா அவ்வாறுரைத்தார். நடப்பது நடந்தேதீரும். நாம் யோசிப்பதில் பயனில்லை.

சுமந்—எதற்கும் இப்பொழுது நாம் கவலையுறவேண்டாம். அரசனிறந்த பிறகன்றோ! சல்லியன் சிங்காதனமடையப் போகின்றான். அதற்குள் என்ன நடக்கின்றனவோ நாமறியோம். அதோ சல்லியன் வருகின்றான், நம்மை அவன் காணலாகாது.

[எல்லோரும் போகின்றார்கள்.]

[சல்லியன் வருகின்றான்.]

சல்லி—இந்தக் கோட்டான்க ளெல்லோரும் நாம் இச்சிங்கா தனத்தை அபகரிக்க எண்ணங்கொண்டிருப்பதை அறிவார்கள். ஆகையால்தான் நான் இன்று சபையில் கூறுகையில் என்னைத் தடுத்து சுமந்திரன் என்னை அவமானப்படுத்தினன். இருக்கட்டும். இதையெல்லாம் நான் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. அரசரோ என்னிடத்தில் பூர்ண நம்பிக்கை வைத்திருக்கிறார். மற்றும் அவர் இறந்தபின் என்னையே பிரதிநிதியாக விருக்கும்படி ஆக்ஞையுமிட்டிருக்கின்றார். கைக்கெட்டிய கனியைப் புசியாது மற்றவனுக்குக் கொடுத்துவிட்டுக் கொட்டாவி விடுபவனோ நான் அல்ல, அக்காலம் வரட்டும். அது வந்தேதீரும். அப்பொழுது இக்கிழ மந்திரிகளையும் அவர்களது சூழ்ச்சிகளையும் அறிகின்றேன். மந்திரிகளே! நீங்கள் யாவரும் அறிவின் மிக்கோர்களே! உங்கள் சூழ்ச்சிகள் பிறர் மாட்டுச் செல்லும், என்னை மிரட்டி எதிர்ப்பது உங்களால் முடியுமோ? நான்யாரென்று நினைத்தீர்கள். இருக்கட்டும், கேவலம் மானிடச் செயலாலாவது ஒன்றுமில்லை. எல்லாம் எனையாளு மீசன்செயல்.

3 அங்கம்.

இடம்—அரண்மனைத் தோட்டம்.

பாத்திரங்கள்—வத்ஸகுமாரன் சம்பகமாலினி சுமிர்தவான் சேடிகள் முதலானோர்கள்.

[வத்ஸகுமாரனும் அமிர்தவானும் வருகின்றார்கள்.]

அமிர்—வத்ஸரே! வத்ஸரே!

வத்ஸ—நான்மாட்டேன்! நான்மாட்டேன்!

அமிர்—என்ன ஐயா மாட்டீர்? ஓடவேண்டாமென்றால் நான் மாட்டேனென்று சொல்லுகிறீர்களோ?

வத்ஸ—நான் மாட்டேன்னுமாட்டேன் மாட்டவே மாட்டேன்.

அமிர்—என்ன இழவு இங்கே வாருமையா!

வத்ஸ—இழவு மாட்டேன்! வரமாட்டேன்!

அமிர்—யாது காரணம் பற்றி வரமாட்டீர்கள்?

வத்ஸ—வாசிக்க வரமாட்டேன்.

அமிர்—வரமாட்டீர்களோ? அப்படியானல் இன்று சபையில் மல்லனுடன் யுத்தஞ்செய்த வீரனை அழைப்பேன்.

வத்ஸ—வேண்டாம்! வேண்டாம்! மாட்டேன்! மாட்டேன்! வேண்டாம்.

அமிர்—ஆனல் இங்கு வாருங்கள்.

[அமிர்தவானருகில் வந்துவிட்டுமறுபடியும் வத்ஸன் ஓடுவிடுகின்றுன்

வத்ஸ—என் நான் போறேன்.

அமிர்—வீரனை யழைக்கட்டுமா?

வத்ஸ—இல்லை! இல்லை! நான் வந்துவிட்டேன். போகட்டுமா?

அமிர்— அதிருக்கட்டும். நான் கற்பித்த பாடம் படித்தாய் விட்டதா?

வத்ஸ—படிச்சுட்டேன்! ஆனல்

அமிர்—ஆனல் என்ன?

வத்ஸ—வாசிச்சுக்கொண்டே போனேன். வீரன் ஞாபகம் வந்துடுத்து. ஐயோ! நான் மாட்டேன் நான் மாட்டேன்.

அமிர்—வீரனுமில்லை ஒருவருமில்லை. இங்கு நான் பயத்திற்குக் கூறினல் அது பிரமாதமாக முடிகின்றதே.

(தொடரும்.)

கே. இராமநாதையர்.

வக்கீல், மதுரை.

அன்பு.

மனிதனுடைய குணங்களில் விசேஷமானவைகளைத் தெய்வ குணங்கள் என்று சொல்லலாம். இவைகளில் அன்பு என்பது மிகவும் உத்தமமான குணம். மனிதனுடைய வாழ்வுக்கும் அவன் செய்யக் கூடிய நல்ல காரியங்களுக்கும் அன்பு என்பது மிகவும் அவசியமாக வேண்டி இருக்கிறது. உலக சம்பத்துக்களுக்கும் மோக்ஷம் முதலிய பாக்கியங்களுக்கும் அன்பு கட்டாயமாக வேண்டிய ஒரு சாதனம். ஒற்றுமைக்கும் சகோதர பாவத்துக்கும் இந்தக் குணம் அவசியமானது. ஆத்மாவினுடைய உற்பத்தி முதல் அன்பு என்கிற குணத்தினால் மட்டும் இந்த உலகமும் மனிதர்களுடைய நற்காரியங்களும் நடைபெற்று வருகின்றன. அன்பினால் இந்த உலகத்தையே வெற்றிகொள்ளலாம் என்றும் அன்பினால் ஆகாதது ஒன்றும் இல்லை என்றும் நாம் அடிக்கடி சொல்லக் கேட்டு இருக்கிறோம். அன்பு என்பது பல வகைப்படும். சந்தர்ப்பத்துக்கும் பொருளுக்குந் தக்கவாறு வித்தியாசமான பெயர்களை அது அடையும். மிகவும் சாமானியமானது. ஒரு லாபத்தை எதிர்பார்த்து ஒரு பொருளிடத்தில் பிரியம் கொள்வதுதான் அன்பு என்கிற ஜாதியில் மிகவும் கீழானகுணம். இது தான் அனேகமாக நாம் பார்க்கக்கூடியது. இதனால் யாருக்கும் பிரயோஜனம் இல்லை. இதை நாம் வெறுக்க வேண்டும். லாபத்தைமட்டும் எதிர்பார்த்துப் பிரியம் கொண்டால் அது நீடிக்கவும் மாட்டாது. அது ஒரு பிரயோஜனத்தையும் தாமாட்டாது. மேலும் அது பலிக்காவிட்டால் அவன் அடைகிறதுக்கமும் அளவற்றது. இதற்குத் திருஷ்டாந்தம், விசேஷ தினங்களில் உபயோகப்படுத்துவதற்காக வளர்க்கிற ஆடு அல்லது கோழி? அன்புஎன்பதில் மிகவும் மேலான ஜாதிக்குப் பக்திஎன்றும் சொல்லலாம். இதுவே மோக்ஷத்தைத் தாக்கூடிய முக்கிய குணம். இவைகளுக்கு மத்தியிலே அனேக வகைப்பட்டு அனேகவித பெயர் கொண்டு அன்பு விளங்கும். உதாரணம்:ஒரு தகப்பன் தன் குழந்தையிடம் காட்டக்கூடிய அன்பு ஒரு வைத்தியர் நோயாளியிடம் காட்டக்கூடியஅன்பு இவைபோல்வது. சாதாரணமாக ஒவ்வொரு மனிதனும்இயற்கையாகத்தன்னுடைய சொந்தலாபத்தையேஎண்ணிஅதற்காகவே தன்னுடையபுத்திசக்தி முதலிய குணங்களைப் பிரயோஜனப்

படுத்திவருகிறான். வீடு வாசல் வாங்கவேணும், மிகவும் பணம் நகை முதலியவைகளை அடையவேணும் என்று ஆசைப்படுகிறான். சுய நலத்தைமட்டும் எண்ணி ஒருமனிதன் ஒரு காரியத்தைச் செய்வான் ஆனால் பாபம், புண்யம், கௌரதை, ஈகை, இரக்கம் முதலியவைகளைக் கவனிக்கச் சாத்யப்படுகிறதில்லை. கடவுளர் நமக்குப் படைத்துக் கொடுத்து இருக்கிற (pleasures of life) இவ்வுலக சுகபோகங்களை அவன் அனுபவிக்கக் கொடுத்துவைக்காதவன் ஆகிறான். சுயகாரியப் புலி என்றும் பணம் தேடிக் காத்து வைக்கும் பிசாசு என்றும் நாம் சொல்லக்கேட்டு இருக்கிறோம்.

இப்பேர்ப்பட்டவர்கள் உயிர்வாழ்வதைக் காட்டிலும் பிறவாமல் இருப்பது நல்லது. இப்பேர்ப்பட்டவர்கள் பிறருக்கு ஒரு பொருளைக்கொடுக்கவும் மாட்டார்கள். பிறர் கொடுப்பதையும் கெடுத்துக் கொடுக்கவும் சம்மதியார்கள்.

"ஈயா மனிதரை ஏன்படைத்தாய் கச்சியேகம்பனே" என்று கவி சொன்னது மிகவும் சரி.

ஆனால் ஒவ்வொரு காரியம் செய்யும்போது ஆசையும் அந்தக் காரியத்தினால் ஒரு பிரயோஜனமும் இயற்கையாகவே உண்டாகின்றன. ஆனால் அந்த ஆசை என்றது மனிதனுடைய நல்ல குணங்களைக்கெடுத்துவிடக்கூடாது. அந்த ஆசை மனது சவுக்கியத்தையும் தனக்குமட்டும் அல்லது உலகமுழுமைக்கும் நல்லதும் சாஸ்வதமானதுமான பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கவேண்டும். தெய்வகுணங்களை வளர்க்கச்செய்யவேணும். படிப்படியாக அவன் மிருகத்தன்மையை இழந்து தெய்வத்தன்மையை அடையவேணும். அப்படிப்பட்ட ஆசையோடுதான் ஒரு நல்ல காரியம் செய்ய எத்தனிக்கவேண்டும். தானும் தன் பெண்டாட்டி பிள்ளைகள்மட்டும் சுகம் அடைந்தால் போதாது. உலகமுழுமையும் சுகம் அடையவேணும் என்று எண்ணி ஒரு நல்ல காரியம் செய்யவேண்டுமாம். அப்படி எண்ணி நல்லகர்மா செய்கிறவர்களே புருஷ உத்தமர்கள். அடியார்கள். தெய்வசம்மதமாக நடப்பவர்கள். அவர்களாலேயே இந்த உலகம் நடைபெற்று வருகிறது. இவர்களை மகாத்மாக்கள் என்றுசொல்லலாம். இவர்களுடைய அன்புக்கும் பக்திக்

கும் அளவுசொல்லமுடியாது. எல்லாரிடத்திலும் ஒரே திருஷ்டியாக யாதொரு வித்தியாசம் அன்னியில் விசேஷ அன்புகாட்டக்கூடியவர்கள் தான் விசேஷ தெய்வபக்தி கொள்ளவும் மோக்ஷசாம்ராஜ்ஜியத்தை அடையவும் கூடும்.

சாதாரணமாக பிரயோஜனத்தை எதிர்பார்க்காமல் அன்புகாட்டக்கூடியதற்கு ஒரு திருஷ்டாந்தம்—பாலும் தண்ணீருமாம். இந்த அன்பை விசேஷ சிநேக லக்ஷணம் என்றும் சொல்லலாம். மற்றொரு உதாரணம் உண்டு. அடுப்பில் வைத்துகாய்ச்சுகிற பால் பொங்கி நெருப்பில் விழுந்து சேருவது. அன்பின் மிகுதியால் மிகவும் ஆவலோடு பாலானது அக்கினியைத்தேடிச் சேருகிறது. தான் அழிந்தாலும் கவலையில்லை என்று கொஞ்சம்கூட யோசிக்காமல் பொங்கி ஆவலோடு இறங்கி அக்கினியிடம் சேருகிறது. இதை ஒரு விசேஷ அன்புக்கு உதாரணமாகச்சிலர் சொல்லுவார்கள். ஒருவரிடத்து அன்பு காட்டினால் அவர்களுடைய சுகதுக்கத்தை நாம் பங்கிட்டுக் கொள்ளவேணும். சிலர்தான் அப்படிச்செய்யக்கூடும். அநேகர் அதைப் பொறுக்கமாட்டார்கள். அசாத்யமான காரியம் என்றுவிட்டுவிடுவார்கள். உண்மையான அன்பும் தெய்வகடாக்ஷமும் பெற்றவர்கள் மஹாபுருஷர்கள், அவதாரபுருஷர்கள் என்பவர்கள் தன்னுடைய சுக துக்கங்களை மறந்து மற்றவர்களுடைய சுகதுக்கங்களை மிகவும் சந்தோஷத்தோடு தான் ஏற்றுக்கொண்டு மிகவும் பொறுப்பான காரியங்களை மிகவும் சாமர்த்தியமாகவும் எல்லாருக்கும் சமமாகவும் நிரம்பவும் சாஸ்வதமாகவும் சுகத்தைக் கொடுக்கும்படிக்கும் அவர்கள் பாடுபடுவார்கள். அன்பே உலக உற்பத்திக்குக் காரணம். உலகம் நடைபெறுகிறதும் மனிதர்கள் செய்யும் கெட்ட காரியங்களைக்கடவுளர் பொறுத்து ஆள்வதற்கும் அன்பே காரணம். அப்படி அல்லாது சாமானிய மனிதர்போலக் கடவுளர் நம்மீது அன்பு குறைந்து நம்முடைய அபசாரங்களுக்குக் கோபங்கொண்டு ஒரு சிக்ஷை செய்தால் நம்முடைய கெதி என்ன ஆகும் என்று யோசிக்கும்போது மிகவும் பயத்தைக்கொடுக்கிறது. உதாரணமாகக் கடவுளர் கோபம் கொண்டு காற்று வீசவேண்டாம் என்றாவது மழைபெய்யவேண்டாம் என்றாவது கட்டளை இட்டால் உலகம் பொறுக்குமா? நம்முடைய கெதி என்ன ஆகும். கடவுளாது அன்பு மிகுதியினால் அபசாரங்களைப் பொருட்டாக அவர் எண்ணாமல் எல்லாரையும் ஆண்டு வருகிறார். அவருடைய அன்புகுறையும்படி நடக்கக்கூடாது. அப்படிக் குறைந்தால் பாபிகளுடைய கூட்டம் அதிகப்படும். பூமிபாரம் தாங்கமுடியாமல் பூமிதேவி கடவுளர் இடம் முறையிடுவாள். அவர் பிளேக், காலரா, பஞ்சம், யுத்தம் முதலிய பலவகையால் உலகத்தாரைச் சிக்ஷிப்பார் என்பது பெரியோர்களுடைய அபிப்பிராயம்.

(இன்னும் வரும்.)

ராமராவ், வக்கீல், மதுரை.

மஹா சிவராத்திரி.

சிவராத்திரி என்னும் பதம் யோகத்தினலமைந்ததா, ரூடியாலமைந்ததா? யோகத்தினலென்றால் சிவ—ராத்திரி என்பது சிவனுடைய ராத்திரி அல்லது சிவமான (மங்களமான) ராத்திரி யென்று அர்த்தமாகும். அப்போது நாம் எந்தெந்த ராத்திரியில் சிவபூஜை முதலானவை செய்கிறோமோ அந்தந்த ராத்திரிகளெல்லாம் சிவராத்திரியே ஆகும்.

சிவராத்திரி விரதத்தைக் கூறும் ஸ்மிருதிகளிலும் ஆகமங்களிலும் மாகமாஸத்திய கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியையே சிவராத்திரி என்று கூறப்பட்டிருப்பதால் ரூடியாக அர்த்தம் சொல்வதே உசிதம். ஆயினும் யோகார்த்தமும் ரூடிஅர்த்தத்தை உபஜீவித்து நிற்கும். ஆகவே சிவராத்திரி என்ற பதம் பங்கஜம்போல் * யோகரூடி ஆகும்.

ஸ்மிருதிகளிலும் ஆகமங்களிலும் சிவராத்திரி விரதத்தைக் கூறும் வாக்கியங்களில் "வர்ஷேவர்ஷே" என்ற வீப்ஸையும் நித்தியம், நிச்சலம், இத்யாதி சப்தங்களும் காணப்படுவதாலும் ஸ்காந்தம், ஈசானஸங்கிதை முதலிய கிரந்தங்களில் சிவராத்திரி விரதானுஷ்டான மில்லாதவனுக்கு மஹா ப்ரத்யவாயம் சொல்லியிருப்பதாலும் இந்த விரதம் நித்யமே ஆகும்.

சிவராத்திரி விரதமனுஷ்டிப்பவன் சகலபோக போக்யங்களையுமடைவான். சிவகணங்களி லொருவனுவான் என்றுபல சுருதி இருப்பதால் இது ஒரு காமியமாக ஆனாலும் அக்னிஹோத்ரானுஷ்டானத்தில் யஜமானனுடைய மனஸ்ஸங்கல்பத்துக்குத் தகுந்தபடி காமியமாகவும் நித்தியமாகவும் ஆகுமென்று சொல்லியபடி இந்தச் சிவராத்திரி விரதமும் நித்யமாகவும் காமியமாகவும் ஆகும்.

ஸ்காந்தம், நாகாகண்டம், லிங்கபுராணம், காமிகம், ஈசான ஸங்கிதை முதலான கிரந்தங்களில் சொல்லியபடி மாகமாஸம்கிருஷ்ண பக்ஷம் சதுர்த்தசி அர்த்தராத்திரி காலத்தில் பரமேசுவரன் ஜ்யோதிர்மயமாக மஹாலிங்கமாக ஆவிர்பவித்தார். ஆகையால் ஷ சதுர்த்தசி அர்த்தராத்ரவ்யாப்தியுள்ளதாக இருக்கவேணும். திதிவிருத்தியினல்

---

* யோகம்—காரணப்பெயர். ரூடி இடுகுறிப்பெயர், யோகரூடி—காரண இடுகுறிப்பெயர்.

இரண்டு நாளும் அர்த்தராத்ர வியாப்தியுள்ளதாக இருந்தால் பிர தோஷகால வியாப்தியும் அர்த்தராத்ரவ்யாப்தியுமுள்ள மறுநாள் சிவராத்திரியாகும். பிரதோஷகால வியாப்தியும், அர்த்தராத்ர வியாப் தியும் முதல்நாள் ஸம்பவித்தாலும் முதல்நாள் சிவராத்திரியாகும். இரண்டுநாளும் அர்த்தராத்திர வியாப்தியில்லாத பக்ஷத்தில் பிர தோஷகால வியாப்தியுள்ள மறுநாள் சிவராத்திரியாகும். முக்கியமாய் சிவ சதுர்த்தசிக்கு ஜயா என்ற திரயோதசி திதியின் யோகம் பிரச ஸ்தமாகும் காலமே இரண்டு விநாடியாவது திரயோதசியிருந்து அதன்மேல் சதுர்த்தசி 58—உபரி அமாவஸ்யை நேர்ந்தால் விசேஷ மான சிவராத்திரி ஆகும்.

இத்துடன் சோமவாரம் சேர்ந்தாலும் அன்று. மஹா பிரதோ ஷம் நேர்ந்தாலும் மிகவும் சிலாக்கியம். சிவராத்திரி விரதத்தில் பக்தியுள்ளவர்கள் எல்லோருமே அதிகாரிகள். இதில் உபவாஸம், ஜா காணம், பூஜை, முக்யம். மறுநாள் பாரணம் அவசியம்.

உபவாஸத்தில் அசக்தர்களான பாலர்களும் ஆதுரர்களும் கூட பலம் அருந்தி ஜாகரணம் பூஜை செய்யவேணும். இராத்திரி நான்கு யாமங்களிலும் பூஜை செய்யவேணும்.

சிவராத்திரி காலத்தில் பரமசிவன் ஸ்திரசரங்களான எல்லா லிங்கங்களிலும் ஸான்னித்தியம் செய்கிறார். அன்று சிவார்ச்சனம் செய்பவனுக்கு புனர்ஜனனமில்லை. சிவஸாயுஜ்ய பதவி பெறுவான்.

வேட்டையாடச்சென்ற ஒரு வேடன் ஆகாரமகப்படாமல் உப வாஸமாக இருந்து ராத்திரி துஷ்ட மிருகங்களின் பயத்தினால் ஒரு வில்வமரத்திலிருந்து தூக்கமில்லாமல் வில்வ இலைகளைக்கிள்ளிக் கீழேபோட அது ஒரு சிவலிங்கத்தின்மீது வீழ்ந்தது. அம்மட்டில் சிவபூஜையின் பலனைப்பெற்று சிவானுக்ரகம் பெற்றான். பக்தியுடன் சிவபூஜைசெய்தவர்களைப்பற்றி ஏதும் விசாரிப்பதேன். சிவராத்திரி விரதம் அவசியம் அனுஷ்டிக்கவேணும் என்று புராணங்கள் கூறு கின்றன. சுபம்.

அ. சங்கரசாஸ்திரி,

சோழவந்தான்.

மதிப்புரை.

மகிபாலன்பட்டி வித்துவான் திருவாளர் மு. கதிரேசச் செட்டியாரவர்களிடமிருந்து சுலோசனை, உதயன சரிதமென்னும் இரண்டு புத்தகங்கள் எமது தமிழரசின் பார்வைக்கு வந்துள்ளன. இவ்விரண்டு புத்தகங்களின் விஷயங்கள் வடமொழியிலிருந்து தென்மொழியில் மொழிபெயர்த்திருப்பது இவரது வடமொழி தென்மொழிப் புலமையை நன்குவிளக்குகின்றது. விஷயங்களைப் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் பேரானந்தத்தை விளைவிக்கின்றது. இவரது புலமைத் திறத்தைத் தமிழ்நாடு நன்கறிந்துள்ளதாதலினிதனைப்பற்றி மிக விரித்தெழுதல் வேண்டா. இப்புத்தகங்களைச் செந்தமிழ்கற்ற தமிழ்மக்களனைவரும் படித்துணரவேண்டிய தவசியமேயாகும். கலாசாலையதிகாரிகள் பொருள் முடிபு சிறிதுமில்லாத புத்தகங்களையும் நாவல்களையும் பாடமாக வைப்பதைக் காட்டிலும், இத்தகைய புத்தகங்களைப் பாடமாக வைத்தல் நலம். புத்தகம் வேண்டுவோர் உதயனசரிதம் விலை அணா 8. சுலோசனை அணா 4. வீதம் தலைவர் சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை சமஸ்தானம். என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மதுரை புத்தகவியாபாரம் எஸ். கூடலிங்கம்பிள்ளையவர்களிடமிருந்து நமது பார்வைக்கு மங்கம்மாள் சரித்திரமும் இரக்தாக்ஷி வருடப் புதுப்பஞ்சாங்கமும் வந்துள்ளன.

எங்கும் புகழ்பெற்ற மங்களம்வாய்ந்து துங்கமிகுந்த புங்கமிலங்கயற் கண்ணியிருந் தரசியற்றிய கூடலம்பதியில் திருமலை நாயக்கர் மரபில்வந்த மங்கம்மாள் சரிதையைச் சிலர் பங்கப்படவெழுதினர். அதைக் கூடலிங்கம் பிள்ளையவர்கள் மிக முயற்சியெடுத்துத் தக்க வாதாரங்காட்டி விளக்கியெழுதியிருப்பது போற்றத்தக்கதாகும். எங்கும் மங்காச்சாலைகளியற்றிய மங்கம்மாள் புண்ணிய சரிதையின் புண்ணியப்பயனவர்க்குஞ் சிறிது கிடைக்கு மென்பதில் யாதொரு ஐயமுமில்லை. பஞ்சாங்கமுடையது பஞ்சாங்கமென்பது இவரது பஞ்சாங்கத்திற்கே சாலப்பொருந்தும். இவரின்னும் தக்க பழஞ்சரிதைகளை யெடுத்தச்சியந்திரத்தேற்றுவாராயின் உலகிற்கு மிகப்பயனளிக்கும். வேண்டுவோர் எஸ். கூடலிங்கம்பிள்ளையவர்கள், புக்ஷாப் புதுபண்டபம், மதுரை என்றெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பொது சமாசாரம்.

ஜர்மனியில் மெயின்ஸ் பட்டணத்துக் கோவிலிலுள்ள கடிகாரத்துக்கு 500—ஆண்டுக்கொரு முறைதான் சாவி கொடுக்கிறார்களாம்.

ஆகாயத்திற் பலவிதமான வர்ணப் புகையால் எழுதி விளம்பரஞ் செய்யும் முறையை இங்கிலாந்தில் ஒருவர் கண்டு பிடித்திருக்கிறார்.

பம்பாய் மாகாணநாட்டுப் புறங்களிலிருந்து 120 கிறிஸ்தவகுடும்பத்தைச்சேர்ந்த 363 பெயர்கள் பம்பாய் இந்துசபையின் ஆதரவில் இந்துமதத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

இந்தியாமந்திரி சபையில் ஓர் அங்கத்தினரான ஸ்ரீமான் பி. ராஜகோபாலாச்சாரியரின் நெருங்கிய பந்துவான ஸ்ரீமதி சீதம்மாள் சென்னையிற்படித்து எம். ஏ. பரீக்ஷைதேறி, தற்போது இங்கிலாந்துக்குப் படிக்கப்போயிருக்கிறார்.

அருணாசலம் என்ற திருவண்ணாமலை நீர் ஜலமாயிருக்கிறதாம். சேலம் ஜில்லா ராசிபுரத்தில் 12 குடம் கொண்ட ஒரு பீப்பாய் ஜலம் அரை ரூபாயாக விற்கிறதாம். நமது நாட்டின் நீர்வளம் இப்பொழுது புராணங்களில்தான் விளங்குகிறது.

மதுரையில் தேவாரமும் திருநீறும்:— சமயாசாரியர்களால் பாடப்பெற்ற பல பதிகங்களைக்கொண்ட மதுரை திருக்கோயிலில் ஓதுவார்க்கு மானிபம் இருந்தும் ஆராதனைக் காலங்களில் ஓதுவார்கள் ஓதுவதில்லை என்றும், அம்மையார் கோயில்முன் தாம்பாளம் தாங்கி நிற்கும் ஆதிசைவ மரபினர்களுக்கும் மானிபம் இருந்தும் அவர்கள் பணம் கொடுப்பவர்களுக்கு முன் நடிக்கிறார்களே யன்றி பக்தர்கள் திருநீறு கேட்பின், கோபங்கொண்டு வாய் வெடிக்கிறார்களென்றும், திருநீற்றுப்பெருமை விளக்கிய இந்தத்தலத்தில் இத்தகைய அநியாயங்கள் நடப்பதைத் தர்மகர்த்தர்களும் கமிட்டியார்களும், தேவாரம் அருளிய மூவருள் முதல்வரான திருஞானசம்பந்தர் திருப்பெயர் தாங்கிய ஆதீன கர்த்தரும் கவனிக்கவேண்டுமென்றும் ஒரு யாத்திரைவாசி, எழுதுகிறார். இவ்விஷயம் எல்லாக்கோயில்களுக்கும் பொருந்தும். (லோகோபகாரி.)

நமது பத்திரிகைக்கு நன்கொடை.

மதுரைஜில்லா திண்டுக்கல்தாலூகா மாம்பாரை சப் ஜமீந்தார் K. பாசுராம நாயக்கரவர்கள் ரூ 5—0—0ம் திருச்சிஜில்லா . கடவூர் சப் ஜமீந்தார் அக்கமுத்து நாயக்கரவர்கள் ரூ 10—0—0ம் வருடந் தோறுந் தந்துபரிபாலிப்பதாக வாக்களித்துதவியுள்ளார்கள். இவர்கள் தமிழாசனுக்குதவியங்கத்தவராயிருந்துதவியது சாலச் சிறப்புடைத்தாம். மதுரையையாண்ட திருமலை நாயக்கரவர்கள் எங்கும் கருணைபாலிக்கும் அங்கயற்கணணிமேற். பிள்ளைத்தமிழ் பாடிவந்த குமாகுருபா சுவாமிகளை எங்ஙனம் உபசரித்தனரோ? அஃதிலொரு சிறிதொப்ப ,அவர்வம்சத்தாராகிய இவர்களுதவியது தமிழ்நாட்டு ஜமீந்தார்களையும் உதவவேண்டுமென்று தூண்டுவதாகும். அன்னார்களுக்கென் மனப்பூர்வமன நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

போறுப்பாளர்.

தமிழர் நேசன்.

சென்னையிலுள்ள பலபெரியார்களால் நிறுவப்பட்ட "தமிழர் கல்விச்சங்கத்தார்" ஏழு வருஷகாலமாக நடத்திவரும் பத்திரிகை. விவசாயம், வைத்தியம், இரசாயனம், பௌதிகம், பூதத்துவம், சரித்திரம் முதலிய பல சாஸ்திரங்களும், உயிர்நூல், விலங்குநூல், தாவரநூல், வானநூல் முதலியவைகளும், ரசமான தொடர்ச்சிக்கதைகள், சிறுகதைகள், நாடகங்கள்முதலியவும், தமிழ்ப்பாஷையிலுள்ள பண்டை நூல்களின் ஆராய்ச்சி முதலியவும், ஆங்கிலம், ஹிந்தி முதலிய பாஷைகளினின்று மொழிபெயர்ப்புக்களும், பிறவும் சிறந்தமேதாவிகளால் இப்பத்திரிகையில் எழுதப்பட்டு வருகின்றன. மேற்கூறிய விஷயங்களைத் தெளிவாய் விளக்குதற்கு வேண்டிய சித்திரப்படங்களும் மிகுந்து காணப்படும் இப்பத்திரிகையானது நவீன சாஸ்திர அறிவையும் ஆராய்ச்சி முறைகளையும் தமிழ் மக்களுக்கு ஊட்ட வேண்டுமென்ற நோக்கத்தையே கொண்டது, ஆதலால் யாவரும் வாங்கிப்படித்தற்கு உரியது.

[வருஷச் சந்தா உள்நாடு ரூ 3. வெளிநாடு ரூ 4.]

கௌரவத் துணைக்காரியதரிசி,

'தமிழர் கல்விச்சங்கம்' மயிலாப்பூர், சென்னை.

தமிழரசுப் பத்திரிகையின்
அபிப்பிராயங்கள்.

சென்னை, திருவல்லிக்கேணி, திருவட்டீஸ்வரன் பேட்டை
தியாகராஜவிலாசம் மஹாமஹோபாத்தியாயர்
ப்ரும்மஸ்ரீ
வே. சாமிநாதையரவர்கள்

தமிழ்நாட்டிற் புகழ்பெற்ற குடும்பத்திற்பிறந்ததாம் அதனை விளக்குதற்குரிய நன்முயற்சித்துறையிலிறங்கித் தமிழரசு என்னும் பத்திரிகை அச்சிட்டு வருதலைத்தெரிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். (21—2—24.)

மதுரை செந்தமிழ்ப் பத்திராதிபர் ஸ்ரீமத்
திரு. நாராயணையங்கார் அவர்கள்

தாங்கள் பொறுப்பேற்று நடத்திவரும் தமிழரசு என்னும் பத்திரிகையின் முதல் நாலு இதழ்களையும் பார்த்து மிகுந்த சந்தோஷமடைகிறேன். பாரம்பரையான வித்வத் குடும்பத்திற் பிறந்த தாங்கள், முன்னோர் பெருமைகளை நிலவச்செய்வதும் தமிழ் வளர்ச்சிக்குரிய செயல்களைப்புரிவதும் தகுதியே. தமிழ்ச்சுவ திறபயின்ற தாங்களும், தங்கள் நண்பர்களும் பத்திரிகை நடத்துந் திறமை தமிழ்ச்சங்கத்துக்குப் புகழைப் பயப்பிப்பதாகும், தங்கள் முயற்சியும், கல்வியறிவும் மேன்மேல் வளர்ச்சியடைந்து உலகிற்குப் பயனளிக்கும்படி சர்வேசுவரனைப்பிரார்த்திக்கிறேன். (26—2—24.)

பழநித்தாலூகா, மரம்பாரை சப்ஜமீன்தார்
ஸ்ரீமாந் K. பரசுராமநாயக்கரவர்கள்

தமிழ்த்தலத்தின் தலைமைப்பதியாம், முச்சங்கம் வயங்கிவரும், மதுரைமாநகர்க்கண், தற்சமயம், வேம்பத்தூர்ச் சிலேடைப்புலி

ஸ்ரீ பிச்சுவையரவர்கள் குமாரர் ஸ்ரீ பாஸ்கரையரைப் பொறுப்பாள ராகப்பெற்று வெளிவரும் 'தமிழரசு'ப் பகுதிகளைக்கண்ணுற்றனன்.

தமிழைத்தாங்குதலே யருமையாயிருக்கு மிக்காலத்திற் றமி ழரசைத்தாங்க முன்வந்த விப்பொறுப்பாளரினாற்றலும் பெற்றியு மெத்தகைத்தாயிருக்குமென்பதை அறிவாளரே யுய்த்துணரக்கூடி யது.

அன்றியும் 'மகனறிவு தந்தையறிவு' என்பதை டி ஐயாவர் கள் தம் விஷயதானங்களிற் சிற்சில சொற்பொழிவாற்றால் விளக்கி யுள்ளதைக் கண்டானந்தமெய்தினன்.

இப்பத்திரிகையில் வருமோவ்வோர் விஷயங்களுங் கற்றோரே யன்றி மற்றோர் மனத்தையுங் கவரத்தக்கதாயிருக்கின்றன.

இப்பத்திரிகை நீடூழிநிலவ எல்லாம்வல்ல இறைவனருளைச்சிந் தித்து வந்திக்கின்றேன். (10—3—24.)

சென்னை, புரசபாக்கம், இராமமந்திரம் ஸ்ரீமத்ராமாயணப்பிரசங்க

செந்தமிழ் மதுரமொழி ப்ரும்மஸ்ரீ

வசிட்டப்பாரதி அவர்கள்

இயல், இசை, நாடகமெனும் முத்தமிழ் பயிலுஞ்சங்கத்தலைவ ராயிறைவனுங் குமரனும் பலநாளிருந்தாசிப்பற்றிய பெருந்தவப்பதி யம் மதுரையம்பதியில் இன்னும் தமிழ்க்காசென்னத் தலைப்பெயர் கொண்டெழுந்துலவுகின்ற தங்கள் பத்திரிகை வரப்பெற்றுப் பெரு மகிழ்வுற்றேன். இத்தகையசெயல் பாண்டியநாட்டில் நிம்பையெனப் பெயர் நிலவிய வேம்பத்தூர்ச் சங்கப்புலவர் தங்கள் குழாத்துள் சிலேடைப்புலியெனச் சிறப்புற்றோங்கிய பிர்மஸ்ரீ பிச்சுவையர் அவர் களின் பெரும்புதல்வரிலொருவராகிய தங்கட்கு இஃகரிய தொன் றன்று. இது பல்லாண்டுலவப் பழந்தமிழ் மதுரைப்பழமனே யருள் பாலிப்பாராக.

இதன் இதழ்கள் சிலவரப்பெற்ருேம். இதுமதுநண்பர் மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் சு. ஸ்ரீனிவாசையங்கார் அவர்களைப் பத்திராசிரியராகக் கொண்டு வெளிவருவது. இதிற் பல நல்ல கட்டுரைகளும் நீதிசாரமொழி பெயர்ப்புகளும் வைத்தியக்குறிப்புக்களும் பிற விநோதங்களும் வெளிவருகின்றன.

தெய்வ பக்தன்.

இஃதோர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இது மதுரையிலிருந்து ருதிரோற்காரி ஐப்பசி முதல் வெளியாகிக் கொண்டிருக்கின்றது. இதன் ஆசிரியர் ஸ்ரீமான் சு. ஸ்ரீநிவாசையங்கார் என்னும் தமிழ்ப்பண்டிதர். வேம்பத்தூர் பி. பாஸ்கரையரவர்கள் இதன் பொறுப்பாளர். இதனுள் அறிவினுக்கு விருந்தாகும் அரிய விஷயங்கள் பல பல பண்டிதப் பெரியோர்களால் எழுதப்பெற்று வருகின்றன. தர்மங்களையும் சரித்திரங்களையும் தமிழ்ப் பாஷையின் உயர்வையும் கோரும் பலரும் இதன் சந்தாதாரராகச் சேர்ந்து ஆதரித்துப் பலனடைய வேண்டியது அவசியமாகும். இதன் வருஷசந்தா ரூ. 2. வேண்டுவோர் பொறுப்பாளர் தமிழரசு 29 மேலாவணி மூல வீதி மதுரை என்னும் விலாசத்திற் பெறலாம்.

கம்பநாடார்.

இதன் மலர் ஒன்றின் 2-3 இதழ்கள் வரப்பெற்ருேம். இம்மாதப்பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் சு. ஸ்ரீநிவாசையங்காரவர்களாவர். இதில் தமிழ் நாட்டவர்க்கு வேண்டிய பல சரித்திரவிவரங்களும் பௌராணிக விஷயங்களும் பல பண்டிதர்களால் வரையப்பட்டிருக்கின்றன. இதன் வருடச்சந்தா உள்நாட்டுக்கு ரூ. 2—0—0 வெளிநாட்டுக்கு ரூ. 3—0—0. இதுபோன்ற பத்திரிகைகளால் தமிழகத்துக்குப் பெரும்பயன் விளையுமென்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. வேண்டுவோர் 29 மேலாவணி மூலவீதி மதுரை என்னும் விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

தாருல் இஸ்லாம்.

தமிழரசு என்னும் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை மதுரையினின்று வெளியாகின்றது. பாண்டி மன்னராகிய தமிழரசரும் தமிழ் அன்னையும் தாம் அரசுபுரிந்த பெரும் பதியினின்று உலாப்போதல் போன்று இப்பத்திரிகை வெளிப்போதுவதாதலின் தமிழரசுஎன்னும் இவ்வினிய திருப்பெயரிதற்குத் தகைமையின் வாய்ந்தது என்க. தென்றமிழ்ப் பெரியார் செய்திகளும் பிறவும் மேம்பாடு தோன்ற வெளியாகின்றன. தனிவெளியீடு பெறற்குரிய சங்கீத வைத்திய நூற் செய்திகள் தமிழரசியினிருகைலாகு கொண்டுடன் போதுவது இதில் ஓரரியவிசேடமாம். அரிய இனிய கட்டுரைகளும் தமிழரசியின் அரிய அணிகலன்களென ஒளிர்கின்றன. இப்பத்திரிகையின் நடையும் தமிழரசியின் மென்னடை போன்றதே. இதன் வருட சந்தா ரூபாய் இரண்டே. வேண்டுவோர் பத்திராதிபர் தமிழரசு மதுரை என்ற விலாசத்துக்கு எழுதுக.

நச்சினார்க்கினியன்.

தமிழரசு விளம்பர விகிதம்.

மாதம் பக்கம் ஒன்றுக்கு		ரூ.	4—0—0
,,	அரைப்பக்கம் ,,	,,	2—8—0
,,	கால் பக்கம் ,,	,,	1—8—0

பொறுப்பாளர், தமிழரசு ஆபீஸ்.

மதுரை.

ஜீவகாருண்யம் நிறைந்த

ஸ்ரீ தேவி விலாசம்.

அரு. ராம. கு. மீ.

பலசரக்கு மளிகை.

மேலாவணி மூலவீதி, மதுரை,

மெய்யன்பர்களே!

குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம், தேன், நெய், எண்ணெய்த்தினுசுகள், மருந்துச்சாக்குகள், காப்பிக்கொட்டை பல தினுசுகள், அரிசி, குருணை, பெருங்காயம் பலதினுசுகள், பருத்தி விதை, உழுந்தங்குருணை, பெங்களூர் சீயக்காய் பவுடர், சோப்புத் தினுசுகள், பொத்தான், சீப்பு, நன்னாரி சாபத்தினுசுகள், குல்கந்து, மெழுகுவர்த்தி, செண்டுத் தினுசுகள், சித்தாதிகள் முறைப்படி செய்த ஸ்நான பரிமளத்தைலம், பற்பொடி, ரணம், வெட்டுக்காயங்களை ஆற்றக்கூடிய களிம்பு, புகையிலை, பேணிரவைத் தினுசுகள் முதலிய யதார்த்தமான அநேக பலசரக்குச் சாமான்களை நம் நண்பர்கள் நேரில் பார்த்து வாங்கி ஆனந்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

பலசரக்குகள் பூராவும் கல்நாவிச் சுத்தமாகப் புடைத்தே இருக்கும்.

உண்மையாகக் கொடுக்கிறோம். எல்லோரும் சௌக்கியத்தையடைய வேண்டியது. சுபம். சுபம்.

மனம்போல வாழ்வு சத்தியம்.